
கனடிய - ஐரோப்பிய உறவோடு சர்வதேச இதழ்

# ரோஜா




'மலரும் அரும்பு' ரோஜா

கனடாவில் 'அலை மாலைப்பொழுது'



'தமிழீழத்தில்.... புற்களுக்குக்கூட ஒரு சோகக் கதை உண்டு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PHOTO FAST DVD CENTRE

Finest Color Lab & Video Centre

கனடாவில் முதன் முதலில் **Video CD** ஐயும் **DVD** ஐயும் அறிமுகம் செய்தவர்கள்

**9** வது ஆண்டில் **Video** விலிருந்து **DVD** இல் பதித்துத் தருகிறார்கள்

We Transfer From PAL VHS, NTSC VHS, Hi8, D8, DV & VCD TO DVD VIDEO

**SPECIAL**
**2 Hours DVD Transfer $100.00 & Get 2 DVD Movies Free**

## Authorized Dealer For Colombia Film

1200 Sq. Ft. இலிருந்து 5100 Sq. Ft. ற்கு மாற்றப்பட்டிருக்கும் எமது புதிய காட்சியறைக்கு ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
9வது ஆண்டில் புதிதாக அங்கத்தவராகச் சேரும் ஒவ்வொருவருக்கும் 1 Video CD இலவசமாக வழங்கப்படும்!

**ENGLISH - HINDI - TAMIL**

*Buy 5 DVDs For $ 100.00 And Get 1 DVD For Free

*Buy 2 VCDs For $ 25.00 And Get 1 VCD For Free

*Buy 5 Videos For $ 35.00 And Get 1 Video For Free

265 ற்கு மேற்பட்ட தமிழ் **DVD** திரைப்படங்கள்

2800 ற்கு மேற்பட்ட தமிழ் **Video CD** திரைப்படங்கள்

3900 ற்கு மேற்பட்ட ஹிந்தி **DVD** திரைப்படங்கள்

4900 ற்கு மேற்பட்ட ஆங்கில **DVD** திரைப்படங்கள்

**KARAOKE (Audio & Video) TAMIL And HINDI**

| RENT 20 VCDs AND GET 1 TO OWN | RENT 40 DVDs AND GET 1 TO OWN | RENT 20 VIDEOs AND GET 1 TO OWN |
|---|---|---|


**CLUB MEMBERS LUCKY DRAW**

1st. PRIZE -ONE - TORONTO TO SINGAPORE RETURN AIR TICKET
2nd. PRIZE - ONE - TORONTO TO LONDON RETURN AIR TICKET
3rd. PRIZE - ONE - TORONTO TO FLORIDA RETURN AIR TICKET
4th. PRIZE - ONE - DVD PLAYER
5th. PRIZE - TEN - DVD MOVIES

2066 Lawrence Avenue E. Scarborough, On M1R 2Z5
Tel: (416) 757-1623 Fax: (416) 757-1620
www.photofast.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...




**02** இதயராகம்

**03 பயணம் - பதிவுகள்**

*'கந்தளாக் குளம் உடைத்து உறவுகள் மாண்ட கதை....; படைகளின் தேடுத லின்போது, ஓட்டம் பிடித்து தப்பி வந்து காடுகளுக்குள் எனது தம்பி உட்பட இளைஞர்களும் யுகவதிகளும் மறைந்த கதை....'*

**10 இலக்கிய உறவுகள்**
- *கவிஞர் வி. கந்தவனம்*

**15 மனம்விட்டு...** - *எஸ். ராஜ்மோகன்*

**16 எங்கே அந்த வெண்ணிலா** *(தொடர்கதை)- குரு அரவிந்தன்*

"உனக்கு ஒரு செய்தி காத்திருக்கிறது" என்று
சிவந்த விழிகளை மூடித் திறந்தது.
யாருடைய செய்தியாய் இருக்கும்?

**19 தன்னம்பிக்கை** - *ஆதிஜா*

**20 டாக்டர் இராதாகிருஷ்ணன்**
- *கோவை ஜெயந்தி*





**16 என்னோடு மீட்டிப் பார்க்கிறேன்**
- *வ. பாலகிருஷ்ணமூர்த்தி*

**24 மலரும் அரும்புகள்**

**40 ஞாபகங்கள் மழையாகும்...**
*(தொடர்கதை)*
- *கலைவாணி இராஜகுமாரன்*

காதல் என்பது...
சொற்ப நேரம்
வாழ்க்கை வானத்தில்
வந்துபோகும் வானவில்!
விழித்தவுடன் மறந்துபோகும் கனவு!
காதல் என்பது...
திருமணத்தின் பின்னான
பொய்களுக் கெல்லாம்
முகவுரை'

**27 'லண்டன் ரைம்'**
**வாழ்த்து பக்கங்கள்**

**38** குழந்தைகளின் ஆரோக்கியத்தைப்
பாதிக்கும் பொம்மைகள்
- *தேவராணி சிவராஜா*

**43** பாலர் பூங்கா

**49 தேவை ஒரு தூக்குக் கயிறு**
**- கணபதி ரவீந்திரன்**

**58** புன்னகை புரிய வாரீர்
- *அஞ்சலா*

**62** குறுக்கெழுத்துப் போட்டி

**63** பல் - பயன் - நோய்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா

பல்சுவை இதழ்

ROJAH

ISSN 1492-4501

January 15, 2003

பிரதம ஆசிரியர்:
**விஜய் ஆனந்த்**

ஆசிரியர் குழு:
**குரு அரவிந்தன்**
**கலைவாணி இராஜகுமாரன்**
**நடா மோகன்**
**பரம். ஜி**
**எஸ். பாலச்சந்திரன்**
**கஜன் கணேசலிங்கம்**

சிறப்பு ஆலோசகர்:
**கவிஞர். வி. கந்தவனம்**

நிர்வாக ஆசிரியர் (கனடா)
**அனுஷியா ஆனந்த்**

நிர்வாக ஆசிரியர் (லண்டன்)
**கலைவாணி மோகன்**

நிர்வாக ஆசிரியர் (இலங்கை)
**இ. ரவீந்திரன்**

வெளியீடு
**கனடா தமிழ் கிரியேட்டஸ்**
**லண்டன்** First Audio - UK
**ரோஜா வெளியீட்டகம் - இலங்கை**

அச்சமைப்பு/ வடிவமைப்பு/ அச்சடிப்பு:
Anoosha Graphics & Designs

அட்டை அச்சடிப்பு:
**பரடைஸ் அச்சகம்**

கனடா முகவரி:
1711 McCowan Road
P.O. Box 41575, Scarborough, ON.
M1S 2Y0 Canada.
Tel: 416 494 7440, Fax: 416 497 9507

London First Audio - 'Rojah'
P.O. Box 18772, London, E6. 1RW, UK
Tel: 0208 586 9636 Fax: 0208 471 1985

www.rojah.com

*மலர்ந்த ரோஜா - பேசும் ஆசிரியரின் பேனா*

# இதயராகம்

## கனவுகள் நனவாகின்றன

தமிழ் மொழி வாழ தரணியில் தலை நிமிர்கிறது தமிழீழம். தமிழீழம் தனி நாடாகத்தான் இருக்கவேண்டியதல்ல. தமிழருக்குக் கிடைக்கவேண்டிய அனைத்து உரிமைகளுடன் தனி மாநிலமாக தமிழன் ஆண்டால் சரி. தமிழ்நாட்டை தமிழன் ஆளத் துடிக்கிறான். தமிழ்நாட்டில் தமிழைக் காப் பாற்ற அறிஞர்களும், கவிஞர்களும் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

சிலர் 'நாய் வாலை நிமிர்த்த முடியாது' என்ற நிலைக்கு வந்து விட்டனர். தமிழும் கலையும் இறுதியாக வாழ்ந்துகொண்டிருந்த கிராமங் களில், 'தொ(ல்)லைக்காட்சியின் வருகையி னால் அங்கும் தொலைந்தது என்றார் ஆதங் கத்தோடு 'உணர்ச்சிக் கவிஞர்' காசி ஆனந்தன் அவர்கள்.

தமிழ் சினிமாக்களுக்கு தமிழ் பெயர் கிடைப் பதே அரிதாகிவிட்டது. தமிழ்நாட்டை சினிமா தான் தீர்மாணிக்கிறது. இந்த நிலையில் தமிழ் நாட்டை திருத்தமுடியுமா என்பது கேள்விக் குறிதான். இந்த நிலைகளைப் பார்க்கும்போது தமிழ் மொழியை தக்கவைக்க தமிழீழம் பிறக்க வேண்டும் என்பதே தீர்வாகிவிடும்.

இன்று அந்தக் கனவுகள் நனவாகிக்கொண்டி ருக்கின்றன. தமிழ் மக்களின் உரிமைகள் மட்டுமல்ல மொழியும் காக்கப்படும். 'புலம் பெயர்ந்த தமிழர்கள் தரணியெங்கும் தமிழை யும் கலையையும் வளர்க்கின்றார்கள்' என்று தமிழ்நாட்டில் இருந்து வந்த அறிஞர்களும் அரசியல்வாதிகளும் கவிஞர்களும் கூறிச்செல் கின்றனர். இந்த புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் தனது மண்ணை கட்டியெழுப்புவதற்கு கண்ட கனவுகள் நனவாகின்றன.

*விஜய் ஆனந்த்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்னர்......

மீண்டும் எம் மண்ணில் எனது சுவடுகள்......

# பயணம்.... பதிவுகள்...

விஜய் ஆனந்த்

அவசர அவசரமாக இறுதி நேர கொள்வனவுகளை முடித்துக் கொண்டு, விமான நிலையத்தை 'காசு வீதியால்' (ரோல் ரூட்) சென்றடைந்தோம். இறுதிப் பயணிகளாக விமான அனுமதியட்டையைப் பெறும் போது 'பின் லெடன்' ஞாபகத்துக்கு வந்தார்.

விமான அனுமதியட்டையைப் பார்க்கும் போது ஆசன இலக்கங்கள் அங்கும் இங்குமாக இருந்தன.

என்ன செய்வது? நேரத்துக்கு விமான நிலையம் செல்லாததன் விளைவு..., 'எயர் கனடா' எமது குடும்பத்தைப்




பிரித்துவைத்தது. அடுத்த விமானத்தில் ஏறிப்போகலாம் என்று நின்றுவிடத்தான் முடியுமா...?!

"லண்டனில் இருந்து புறப்படும் போது 'ஸ்ரீலங்கன்' எம்மைச் சேர்த்துவைக்கும்; கவலைப்படாதே" என்று எனது பாதி யிடம் ஆறுதல் கூறினேன்.

எட்டு மணிநேரத்தைத் தொலைத்த பின்பு லண்டன் விமான நிலையத்தில் கால் பதித்தோம். வழமையான நடை முறைகள் நிறைவுற வெளியே வந்த போது, அழைத்துச்செல்ல 'லண்டன் பெஸ் ஓடியோ' அதிபர் திரு. நடா மோகன் வந்திருப்பார் என்று கண்கள் அவரைத் தேடின.

சில நிமிட காத்திருப்புக்குப் பின்னர், அவர் வீட்டுக்கு தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தியபோது....

"ஆனந்தண்ணா, இவர் அவசரமாக 'றெக்கோடிங்' ஒன்றுக்குப் போய்விட்டார். தாஸ் வந்துகொண்டிருக்கிறார். அநேக மாக இன்னும் சில நிமிடங்களுக்குள் அங்கு வந்துவிடுவார். அவர் 'மொபை யில்'லுக்கு (செல் போன்) அழைத்துச் சொல்கிறேன்" என்றார் மோகனின் மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பதை சொல்லிவிட்டு தொலைபேசி இணைப்பைத் துண்டித்தேன்.

சில நிமிடங்களுக்குப் பின்னர்.....

விமான நிலைய ஒலிபெருக்கியில் இனிமையான பெண் குயிலின் குரலில் "விஜய் ஆனந்த், கம் ரு த இன்பொமேஷன் டெஸ்க்" என்ற அறிவித்தல்...

'இன்பொமேஷன் டெஸ்க்' எங்கே என்று தேடுவதுக்குள் ஒருவர் எனது பெயரை ஏலம் போடுவது காதில் விழுந்தது.

"நீங்கள் தான் தாஸா; நான் தான்...." அறிமுகம் செய்தபடி லண்டனில் ஊர்வலம் செல்வதற்குப் புறப்பட்டோம்.

'யார் இந்த தாஸ்?' லண்டன் கலையகத்தின் கலைஞர்களில் ஒருவர். 'அலையோசை' (கனடாவில்) வானொலியில் அதிகாலை 1:30க்கு லண்டனிலிருந்து நேரடி ஒலிபரப்பாகவரும் 'லண்டன் ரைம்ஸ்' நிகழ்ச்சிக்குள் வரும் 'லண்டனில் அம்புறோஸ்' என்ற நகைச்சுவைத் தொடரில் வருபவர்.

ஓ.... அவரா இவர்; இல்லை இவரா அவர் என்று நீங்கள் கேள்வி கேட்பது புரிகிறது. பதில் ஒன்றுதான்.

அடுத்த விமானத்தைப் பிடிப்பதற்கு இன்னும் எட்டு மணித்தியாளங்கள் இருக்கின்றன.

"என் வேலையலுவலாக ஒரு இடத்துக்குப் போய்விட்டு பின்பு மோகண்ணா வீட்ட போவம்" என்றார் தாஸ். இரண்டு மணிநேரத்தில் சென்று விடலாம் என்று அறிந்து கொண்டேன். ஆனால் அன்று வழக்கத்துக்கும் மாறாக லண்டன் வாகன நெரிசல் 4 மணித்தியாளங்களை வீணாக்கிவிட்டது. விரைவாக செல்வதற்கு தாஸ் எடுத்த முயற்சியில் ஒரு குச்சி ஒழுங்கைக் கார் ஓட்டோம்....

ஆங்கிலத் திரைப் படங்களில் சன நெரிசலுக்குள் ஒரு 'காரை' மற்றைய 'கார்' திறத்தும் காட்சியை, நாங்கள் சொந்தமாக அனுபவித்தோம். அது மட்டுமல்ல ஒரு விநாடிக்குள் ஒரு முறை எம்மை நாமே சுற்றிவருவதுபோல இருந்தது. அவரின் பொறுமைக்குச் சோதனை கொடுத்து பசி.

இறுதியாக ஐந்து மணியளவில் மோகனின் இல்லம் எங்களை வரவேற்றது. இன்னும் 90 நிமிடங்களில் அங்கிருந்து விடைபெற்று மீண்டும் விமான நிலையம் செல்லவேண்டும்.

அவசியமாய் எம்மை சுத்தம் செய்து, அவசரமாய் மோகனின் துணைவியாரின் சிறப்பான உணவை ருசித்துவிட்டு, ஆறுதலாய் அங்குள்ள தொடர்பூடகங்களின் நிலை பற்றி கலைஞர்கள் குமரன், அருள்நாதன், நிதா, அஞ்சு, மோகன் எல்லோரும் இணைந்து பேசிக்கொண்டிருந்தபோது, அவசரமாய் விமான நிலையம் செல்லவேண்டிய அளவுக்கு நேரத்தைத் தொலைத்தது ஞாபகம் வந்தது. கலைஞர்கள் கூடினால் கொண்டாட்டம்தானே!


மீண்டும் 90 நிமிடங்களில் தாஸின் வேகமான 'கார்' ஓட்டத்துடன் விமான நிலையத்தை அடைந்தோம். விமான அனுமதியட்டையைப் பெற்று இப்போது விமானத்துக்குள்....

இறுதி நேரமாக இருந்தாலும் 'ஸ்ரீலங்கன்' குடும்பத்தைச் சேர்த்துவைத்தது.

இன்னும் 14 மணித்தியாளங்களில் ஸ்ரீலங்கா விமான நிலையத்தில் எமது கால் பதிப்பு என்று எண்ணியபடி, மாலைதீவில் ஒரு நிறுத்தம் என்பதையும் நினைவுபடுத்திக்கொண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலைதீவு

விமானம் சென்ற வேகத்தைவிட என் எண்ணங்கள் வேகமாய் பறந்து கொண்டிருந்தன. பாடசாலை நாட்கள்..., ஆலயத் திருவிழாக்களில் வீதி சுற்றல்..., ஆண்டுக்கு ஆண்டு வரும் இன துவசிகளின் அட்டகாசங்கள்....

இதற்குள்ளும் 'ஸ்ரீலங்கன்' விமான சேவையின் சிறப்பை எண்ணி ஆச்சரியப்பட்டோம்.

பன்னிரண்டு மணித்தியாளங்களின் பின் னர் ஆழ் கடலின் ஒரு பரப்பில் அழகான குட்டித் தீவுகளை, விமானத்தைச் சரித்தபடி ஒரு சுற்றுச் சுற்றி பயணிகளை ரசிக்கச் செய்தார் விமான ஓட்டி. மாலைதீவு...; இரண்டாயிரம் தீவுகள்! ஆஹா... என்ன அழகு. அழகென்றாலே ஆபத்துத்தானே...

அதிக தீவுகள் கடலினுள் மூழ்கும் அபாயம் இருப்பது தெரியவந்தது. பார்த்தவரை திருப்தியடைந்தோம். விமானம் மாலைதீவில் தரையிரங்கியது. ஒரு மணிநேரத்தின் பின்னர் விமானம் மேல் எழுந்தது. எம்மை ஆயத்தப் படுத்திக்கொண்டோம்.

இன்னும் ஒரு மணிநேரம்...

ஸ்ரீலங்கா விமான நிலையம் நெருங்கு கிறது. வேங்கைகளின் சாதனையும் ஞாபகம் வந்தது. தாக்குதலுக்குள்ளான விமானங்கள் ஏதும் கண்ணுக்குத் தெரிகிறதா என நோட்டமிட்டபோது விமானம் ஓடு பாதையில்...

ஒரு விமானத்தின் எரிந்த ஒரு சிறு பகுதி மட்டுமே இன்னும் அந்த நினைவை மீட்டியது. மண்ணுக்குள் புதைந்த காவ லரணுக்குள் இருந்து கண்கள் நோட் டமிட்டதை பார்க்கும்போது இராணுவ முகாமுக்குள் எங்களை கொண்டுபோய் இறக்கியிருக்கிறார்களோ என்ற சந்தேகம் பிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான நிலையத்தை வந்தடைந்தோம். சிரிப்பற்ற முகங்களிடம் எமது கடவுச் சீட்டுகளைக் கொடுத்து 'குத்து' வாங்கிக்கொண்டோம். கொண்டுசென்ற பொதிகளுக்காய் சிறு காத்திருப்போடு 'வெளிநாட்டவர் கடவுச்சீட்டு வைத்தி ருப்பவரின் வழி' என்ற வெளியேற்றப் பாதையால் எமது பொதி வண்டியைச் செலுத்தியபோது, மறித்து நிறுத்தி கடவுச்சீட்டை பார்த்துவிட்டு மேலும் தொடர அனுமதித்தார்கள். ஆர்வத் தோடு பார்த்துக்கொண்டு நின்றவர்கள் மத்தியில் எனது மாமனாரும் மைத்து னரும்; அதுதான் என் பாதியின் தந்தை யும் தமையனும். இருவரும் எனக்கொரு கை குலுக்கல். கட்டித் தழுவினாள் துணைவி. பேரப்பிள்ளைகளைப் பார்த்த மகிழ்ச்சியில் மாமனார். பல விசாரிப் புக்களுடன் விமான நிலையத்துக்கு வெளியே வந்தபோது...


விமான சேவையின் ஆச்சரியத்தில் திளைத்துநின்ற எனக்கும், என் எண் ணங்களுக்கும் ஏமாற்றம்தான் கிடைத் தது. துப்பாக்கிகளோடு கால்நடை-களாகத் திரிந்த படையினரைப் பார்த்துப் பயந்தான் எனது நான்கு வயது மகன்.

மீண்டும் பயணம். இது உணர்வுள்ள பயணம். நானும் எனது துணையும் பிறந்த மண்ணுக்குப் பயணம். தமிழீழத் தலைநகர் திருமலைக்குச் செல்கின் றோம். "ஐந்து மணிநேரத்தில் சென்று விடலாம்" என்றார் மைத்துனர்.

திருமலை நகரப் பகுதி இப்படி இருக்குமோ என்று வரை படத்தை எண்ணம் தீட்டியது.

நாங்கள் திருகோணமலையை அண்மிக் கின்றோம்.

கந்தளாக் குளம் உடைத்து உறவுகள் மாண்ட கதை....; படைகளின் தேடுத லின்போது, ஓட்டம் பிடித்து தப்பி வந்து காடுகளுக்குள் எனது தம்பி உட்பட இளைஞர்களும் யுகவதிகளும் மறைந்த கதை.....; இப்படிப் பல கதைகளை தந்தை - மகள் - தமையன் என்று மாறிமாறி கடந்த சென்ற அனுப வங்களை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தனர். காதுகள் அவர்களின் உரையாடலைக் கேட்டவாறு கண்கள் வீதியின் இரு பக்கக் காட்சிகளையும் கண்டு வேதனைப்பட்டன.



கால காலமாய் இருந்த இந்து ஆலயங்கள் போர் சூழல் காரண மாகவும் பராமரிப்பு இன்றியும் இடிந்து கிடந்தன. குறிப்பிட்ட தூரங்களுக்கு ஒன்றொன்றாக அமைந்துள்ள படையி னரின் 'மினி' முகாங்களுக்கு முன்னால் கௌதம புத்தர் புதிதாய் அமர்ந்திருக்க, அவருக்கு அழகான இல்லமும் அள வுக்கு அதிகமான மின் விளக்குகளும் ஒளித்தன. பிரசித்திபெற்ற பாலம் போட்டாறிலே முறுகண்டிப் பிள்ளையார் போல ஒரு பிள்ளையார் வீற்றிருப்பார். அந்த வீதியால் செல்பவர்கள் மதங்க ளைக் கடந்து, வாகனங்களை நிறுத்தி அம்பாளையும் பிள்ளையாரையும் வணங்கிவிட்டு, காசை உண்டியலில் போட்டுவிட்டுச் செல்வது வழக்கம். இப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பிள்ளையாருக்கு அருகே புத்தர் அமர்ந்துவிட்டார். அவருக்கென்று தனியாக உண்டியலில் காசு. அவர் அங்கு இருப்பதால் பிழையில்லை. மதங்கள் காட்டும் வழி ஒன்றுதான். ஆனால் சிங்களக் குடியேற்றங்களுக்கு இவர் தான் முதற் காரணமாகிறார்.

திருமலைக்கான பயணம் முடிவுர நகரை அண்மித்துக் கொண்டிருக்கிறோம். செல்லும் வீதியெங்கும் ஒவ்வொரு சந்தியிலிலும் படையினரின் தடைக் காவலரண்கள். புரிந்துணர்வு உடன்படிக்கை காரணமாக வீதித் தடைகள் அகற்றப் பட்டுள்ளன. ஆனால் 'பொலிஸ்', இராணுவம், ஊர்காவல் படையென்று இருவர் முதல் நால்வர் வரை இன்னும் கடமையில் இருக்கின்றனர். தலைமை 'பொலிஸ்' நிலையம் பலத்த பாதுகாப்பான கவலரண்களோடு காட்சி தந்தது. மடத்தடிச் சந்திக்குச் சென்றபோது 1983ம் ஆண்டு இனக்கலவரத்தில் மின் கம்பத்தில் தமிழன் ஒருவன் கட்டி வைக்கப்பட்டு அவனது கழுத்தில் 'டயர்' போட்டு உயிரோடு எரித்த காட்சி என்னுள் தீ மூட்டியது. 'தடைகளை உடைத்தெரிய துணைப்படையிலாவது சேரலாம்' என்ற உணர்வு அங்கு செல்லும் ஒவ்வொரு உணர்வாலனுக்கும் வரும்.

திருமலையின் மத்திய பகுதி பஸ் நிலையச் சந்தி. அதன் அருகேதான் என் துணையாளின் வீடு. "எங்கே அப்பா எங்கட வீடு" என்று கேட்கும் அளவுக்கு அத்துமீறிய சிங்கள, முஸ்லீம் நண்பர்களின் பெட்டிக் கடைகள். இரு கடைகளுக்கிடையில் மூன்று யார் உள்ளே வீட்டு முன் கதவு தெரிந்தது. வாசலின் அருகே அநாதரவாக நாய்க் குட்டிகள். எமது மழலைகள் அநாதரவாக்கப்பட்ட பின் இந்த நாய்க் குட்டிகள் மேல் அனுதாபம் வரவில்லை.

அநியாயம் நடக்கிறது. கடற்கரை ஓரங்களில் கல் வீடுகள். யாரும் காணிகளை இவர்களுக்கு எழுதிக்கொடுக்கவில்லை. தாமே எடுத்துக்கொண்டார்கள். நகரைப் பார்த்தவுடன் கண்ணாடியில் வரைந்தது போல எனது எண்ணத்தின் வரைபடம் உடைந்து சிதறி விழுந்தது.

உணவுர்களின் வெளிபாட்டில், 6 நாட்கள் அகோர வெய்யிலுக்கு மத்தியில் நகரின் சீரழிவைப் பேசிக்கொண்டோம்.

"பெடியங்களிட கையில வந்திட்டால், இவர்கள் பிறகு போகத்தானே வேண்டும்; அதற்குப் பிறகு நகரைச் சிறப்பாகக் கட்டியெழுப்பிவிடுவார்கள்" என்ற உணர்வலைகளும் காதுகளில் இனிப்பாகப் பாய்ந்தது. பெடியங்களிட கையில வந்திட்டால், தங்கள் ஆட்டம் செல்லாது என்பதற்காகப் பெடியங்களிட கையில வரக்கூடாது என்று நினைபவர்களும் இல்லாமல் இல்லை. ஆனால் நீதி, நியாயம், தர்மம் வென்றாக வேண்டுமல்லவா!...

ஏழாம் நாள் வன்னிக்குப் பயணம். விரைவாக எழுதி முடிக்க முடியாத பக்கங்கள்.....

வன்னிப் பயணத்தின் இறுதியில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தற்போதைய அரசியல் நிலை குறித்த விடயங்கள் காலதாமதமானதால் சில கருத்துகள் அடுத்த இதழில் பதிவாகும்.

இந்த இதழுக்கான வரிகளை முடிக்க முன் ஒன்று உறவுகளே! 'தமிழீழத்தில் புற்களுக்குக்கூட ஒரு சோகக் கதையுண்டு; உணர்வோடு செயல்படுங்கள்.'

**பயணம்.... பதிவுகள்....**

**தொடரும்.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PENTAGON PARALEGAL SERVICES LTD.

## வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

உங்கள்
சட்ட உரிமைகளை
அறிந்து கொள்வதற்கும்
உரிய நட்ட ஈட்டினைப்
பெற்றுக் கொள்வதற்கும்
இவர்களை நாடுங்கள்



**TRAFFIC TICKETS**

- Speeding
- Seat Belt
- Red Light
- Careless Driving
- Impaired Driving

Members of the Paralegal Society of Ontario

**UMESH SIVAKANTHAN**

**JEGA FRANCIS**

(OVER 10 YEARS OF INSURANCE EXPERIENCE)

- Car Passenger or Driver
- Taxi
- Bus (TTC)
- Truck
- Bicycle
- Motorcycle
- Pedestrian

**Tel: 416 438 4739**

**Fax: 416 438 8153**

205 - 2100 Ellesmere Road, Scarborough, ON., M1H 3B7





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிநாயகரின்

# இலக்கிய உறவுகள்

கலாநிதி வி. கந்தவனம்

16

## கலாநிதி
## க. சொக்கலிங்கம்

'சொக்கன்' என்ற பெயரிலே தமிழ் கூறும் எழுத்துலகிற் பவனிவரும் கலாநிதி க. சொக்கலிங்கம் அவர்களின் திறமை சொல்லி முடியாது. கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை எனச் சகல துறைகளும் கைவந்த எழுத்தாளர் இவர்.

வீரத்தாய், நசிகேசன், நல்லூர் நான்மணி மாலை, அப்பரின் அன்புள்ளம், கவிதைக் கதம்பம் முதலியன அவரின் கவிதை நூல்கள். 'கடல்' அவரின் சிறு கதைத் தொகுதி. செல்லும் வழி இருட்டு, சீதா, ஞானக் கவிஞன், சலதி என்பன நாவல்கள். சிலம்பு பிறந்தது, சிங்ககிரிக் காவலன், தெய்வப் பாவை முதலியன நாடகங்கள். அவர் எழுதிய கட்டுரைகளோ ஏராளம்.

அத்துடன் சொற்பொழிவு, பட்டிமன்றம், கவியரங்கம் முதலிய நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி இலக்கிய இரசனையையும் தமிழ் உணர்வையும் மக்களுக்கு ஊட்டிவரும் மேடைக் கலைஞராகவும் விளங்குகின்றார்.

சொக்கன் அவர்களின் தொழில் கற்பித்தல். தான் கற்பிக்கும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மட்டுமல்லாது தமிழ் மாணவ மாணவியர் அனைவருக்குமே ஆசிரியரானவர் சொக்கன். சொக்கனை அறியாத பிள்ளைகள் இருக்க மாட்டார்கள். வித்துவான் வேந்தனாருக்குப் பின்னர் மாணவ உலகத்துக்குத் தமிழ் மொழியிலும் சைவசமய பாடத்திலும் விளக்க நூல்கள் எழுதிய பெருமை சொக்கன் அவர்களுக்கே உண்டு.

படிப்பது என்பது ஒன்று பரீட்சை எழுதுவது என்பது இன்னொன்று. சொக்கனின் மாணவர் நூல்கள் பரீட்சைக்கு மாணவர்களை நன்கு தயார் செய்ய உதவின என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவரது நூல்கள் மாணவர்களை மட்டுமன்றிக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் வழிப்படுத்தின. அவர் எழுதிய 'இலக்கணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு' என்னும் நூல் உண்மையாகவே தமிழைச் செம்மையாகக் கற்பிக்க ஆசிரியர்களுக்கு உதவியாக இருந்தது.

இத்தகைய சிறந்த தமிழ் அறிஞரும் எழுத்தாளருமாகிய சொக்கன் அவர்கள் என்னை உளமார மகிழச் செய்த சம்பவம் ஒன்று நல்லூரில் நடைபெற்றது.

நல்லை ஞானசம்பந்த ஆதீனத்தில் நடைபெற்ற விழாவில் எனது தலைமையில் கவியரங்கம் ஒன்று இடம்பெற்றது. பெருங்கூட்டம் மண்டபத்துக்கு அப்பால் வீதியிலும் வழிந்துகொண்டிருந்தது. கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, இ. நாகராஜன், வே. ஐயாத்துரை, கல்வயல் வே. குமாரசாமி ஆகியோர் பங்குபற்றி வழக்கம் போலச் சிறப்பாகச் செய்தார்கள். நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்தபோது சொக்கனும் அவரைச் சூழ்ந்து ஏழு எட்டுப்பேரும் நல்ல கவியரங்கம் என்று பாராட்டினார்கள். எல்லோரும் சைக்கிள் வைத்திருந்தனர். அவர்கள் புறப்படத் தயாராவதைக் கவனித்து, ஏன் அடுத்த நிகழ்ச்சிக்கு நிற்கவில்லையோ எனக் கேட்டேன். 'இல்லை வேலையிருக்கு. கவியரங்கைத்தான் கேட்க வந்தோம்' என்று பதில் அளித்தார் சொக்கன். கேட்க மகிழ்ச்சியாக இருந்தது.

மேலும் தொடர்ந்தார்...

அவர்: 'அடுத்த கவியரங்கத்துக்குப் புதிதாகத் தலைமைக் கவிதை ஒன்று இயற்றிக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும்.'

நான்: 'இன்று பாடியது பழைய கவிதைதான். என்றாலும் நல்லூருக்கு அது புதிதுதானே?'

அவர்: 'எங்களுக்கு அது பழசாகிப் போச்சு. மூன்று இடங்களில் ஏற்கனவே கேட்டுவிட்டோம்.

தொடர்ந்து பேசியதிலிருந்து சில விடயங்கள் புலனாகின. பட்டணத்திலோ அதற்கு அணித்தான பகுதிகளிலோ எனது தலைமையில் கவியரங்கம் நடந்தால்


GEMINI TOURS LTD.

For all your Travel Needs
Lowest Guaranteed
Air Fares, Cruise,
Vacation Packages and
Much More.....

றொறன்ரோ மாநகரில்
குறைந்த விலையில்
நிறைந்த
உத்தரவாதத்துடன்
விமானப் பிரயாணச்
சீட்டுக்களைப்
பெற்றுக்கொள்ளலாம்.

9 Clintwood Gate,
Scarborough, ON

Tel: (416) 441-1522





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கூட்டமாகச் சைக்கிளில் வந்து கேட்பதுண்டு. அரியாலை, திருநெல்வேலி, கொக்குவில் போன்ற பகுதிகளில் சமீப காலத்தில் எனது கவிதைகளைக் கேட்டி ருக்கின்றார்கள். அந்த மூன்று இடங்களி லும் நான் ஒரே தலைமைக் கவிதையைப் பாடியிருக்கிறேன். அக் கவிதை இப்படி ஆரம்பமாகும்:

பைந்தமிழ் ஈழ நாட்டிற்
பாட்டுக்குப் பஞ்ச மில்லை
சிந்தையைக் கவரும் பாட்டுத்
திரைகடல் சூழ்ந்து பாட
முந்திநல் முத்துச் சிப்பி
விந்தைமீன் இனங்கள் பாட
மந்தமா ருதம்போய் உள்ள
மலையெலாம் குலவிப் பாட

மாவலி களனி காலு
வளவைதெய் வீகத் தன்மை
மேவுமா ணிக்க கங்கை
மேலும்பல் லாறு கூடித்
தாவிவீழ்ந் தோடிப் பாய்ந்து
தண்ணெனப் பாடக் கோழிச்
சேவலைக் கேட்டு நாணித்
திருந்திடும் குயில்கள் என்றால்

பார்க்கலாம் பாட்டு ஞானம்
படரடர் காடு மேடு
நீர்க்கரை மரங்கள் சோலை
நிறைந்துறைந் தெழுச்சி பெற்றுச்
சீர்க்கும்புள் ளினங்கள் என்று
சேர்ந்தெலாம் பாடக் கேட்டே
ஆர்க்கின்ற மனிதன் பாடா(து)
அமைவனோ ஈழ நாட்டில்?

அந்தக் காலம் பலவகை முயற்சிகளில் நான் ஈடுபட்டிருந்த காலம். கவிதை பாடப் போதிய நேரம் கிடைக்கவில்லையென்றால் பழைய கவிதை ஒன்றுடன் போவதுண்டு. அதுவும் புதிதாக ஓர் ஊருக்குச் செல்வ தென்றாலே அவ்விதம் செய்வேன். மறு முறை அந்த இடத்துக்குப் போவதென்றால் நிச்சயம் புதிய கவிதையுடனேயே அரங்கில் ஏறுவேன். அந்தந்த ஊரில் உள்ளவரே கவிதை கேட்க வருவார்கள் என்பது என்னினைவு. யாருக்குத் தெரியும் சொக்கன் தலைமையில் ஒரு கூட்டம் என்னைத் தொடர்கின்றதென்று? அன்றைய தினத்திலிருந்து கவியரங்கத்தில் பழைய கவிதை படிப்பதை நிறுத்திக் கொண்டேன்.

'உமது கவயரங்கத்தைத் தொடர்ந்து கேட்டு வருகிறோம்' என்று சொக்கன் சொன்னது எனக்கு தராதரப் பத்திரம் வழங்கியது போன்றிருந்தது. அவர் எனது இரசிகர் என்று அறிந்ததும் எனக்குள் ஒரு தகைமை இருப்பது போன்ற உணர்வு ஏற்படலாயிற்று.

அவர் எனது ஆக்கங்களைப் பத்திரிகைகளிலும் ஊன்றிப் படித்து வந்தவர். 'ஈழநாடு' பத்திரிகையில் எனது 'நல்லூர் நாற்பது' தொடர்ந்து வெளி வந்தது. அதனைப் படித்து, பின்னர் அது நூலாக வருவதை அறிந்து பாடிய வாழ்த்துப் பாட்டு இது;

கந்த வனத்தது பாட்டு
கனியுறு தேன்சுவைக் கூட்டு
சிந்தையை அவற்றிடை நாட்டு
தெளிவுறு மடமையை ஓட்டு.

'நல்லூர் நாற்பது' நாடு
நங்கவி நாலது தேடு
நல்லையிற் கந்தனைப் பாடு
நவையுறு பந்தனை சாடு.
எந்தவ னத்தினில் எங்கும்
இருந்திடு வேனையும் அங்கும்
கந்த வனக்கவி பொங்கும்
கருத்தினில் ஒளிதரும் தங்கும்.

வந்தனை செய்குவை மனமே
வளமுறு கவியிவை தனமே
கந்தனை எண்ணுவை மனமே
கழலினை பாடுவை தினமே.

வாழிய இவர்கவி வன்மை
வாழியிவ் வுலகிடை நன்மை
வாழிய ஆழியின் தண்மை
வாய்ந்தநற் கவித்துவத் தன்மை!

சொக்கன் அவர்களின் கவிபாடும் வன்மை, சொல்வளத் தன்மை, எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மை அனைத்தையும் இப்பாடல் வெளிப்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சொக்கன் ஒரு பிறவி எழுத்தாளர். சதா எழுதிக் கொண்டேயிருக்கும் எழுத்தாளர். முற்போக்கு நற்போக்கு என்று தமிழீழத்து எழுத்தாளர் கட்சிகட்டி முட்டைகளை வீசிக்கொண்டிருந்த காலத்தில், எந்தப் போக்கையும் சாராது தன்போக்கில் தமிழ் வளர்த்த தனித்துவ எழுத்தாளர்.

தமிழ் மரபிலே நன்கு ஊறியவர் எனினும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' எனக் கருதும் புதுமை யாளரும் ஆவர். எதையும் வித்தியாசமாக, புதிதாகச் சிந்திக்கும் மரபுவாதி இவர்.

இவரின் 'சலதி' என்னும் நாவல் எனக்கு மிகவும் பிடித்ததொன்று. நாடகக் கலையைச் சற்றுப் படித்தவன் என்ற வகையில் 'சலதி'யை நன்கு இரசித்துப் படிக்க முடிந்தது. சிலப்பதிகாரத்தை வித்தியாசமான கண்ணோட்டத்துடன் அணுகி, நாவல் ஒன்று படைத்திருக் கின்றார். கிரேக்கர்களைப் பூம்புகாருக்குக் கொண்டு வந்து புதுமை செய்திருக்கின்றார். நாவல் யூறிப்பிடிஸ் என்னும் கிரேக்கரின் கூற்றுடன் இவ்விதம் முடிகின்றது;

'.......எனினும் இச் சமயத் துறவிகள் யாவரும் முழுமையான துறவு மனப்பான்மை கொண்டவர்கள் என்றும் கூறுதல் இயலாது.

'ஆட்சி பீடங்களை ஆட்டங்காண வைப்பதும், அதிகாரங்களைத் தீயவழிகளிற் பயன்செய்வதும், மதத்தின் பெயரால், மொழியின் பெயரால் மக்களைப் பிரித்து வைத்து, இடைவிடாத போராட்டங்களால் தமது நலன்களை வளர்ப்பதுமே இவர்களிற் சிலரின் பொழுதுபோக்காய் உள்ளன என்பதையும் நான் அறிவேன். பிளாட்டோ "தத்துவ ஞானிகளே ஆட்சியாளர் ஆதல் வேண்டும்" என்றார். இவர்களோ "மத குருக்களே மக்கள் தலைவர்" என்பர். ஆனால் வாழ்க்கையில் எல்லாவித சுகபோகங்களையும் ஒரு கணத்தில் நீங்கி, மனம் மொழி மெய்களால் பற்றுக்கள் யாவற்றையும் துறந்தவர்களும் மாதவி போல, கௌசிகன் போல, வசந்தமாலை போல, கோவலனும் கண்ணகியதும் பெற்றோர் போல இல்லாமலும் இல்லை. மேற்கு நாட்டினராகிய எம்மால் விளங்க முடியாததும், பின்பற்ற இயலாததும் இந்த ஒரு பண்பாடே. ஆம், கிழக்கு கிழக்குத் தான், மேற்கு மேற்குத்தான்."

'சலதி' படித்துவிட்டு எறிந்து விடக் கூடிய சாதாரண நாவல் அல்ல. பத்திர மாகப் பேணிவைக்க வேண்டிய மாணிக்கப் பரல்.

ஒருமுறை 'ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலை என் கையில் வைத்தார் சொக்கன். அது அவர் தமது முதுகலைமாணிப் பட்டத்துக்காக எழுதியது. படித்துப் பார்த்த பொழுது அதில் எனது சிறுவர் நாடக முயற்சிகள் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தது கண்டு வியந்துபோனேன்.

சொக்கன் அவர்களே, மாசற்ற உங்கள் இலக்கிய நெஞ்சத்துக்கு தலை வணங்குகிறேன்!


அடுத்த இதழில்...

மீண்டும்

**'அக்கினி பதில்கள்'**

உங்கள் கேள்விகளை
'ரோஜாவின் முகவரிக்கோ
அல்லது தொலைநகலுக்கோ
அனுப்பிவையுங்கள்.

Fax: 416 497 9507
London Fax: 0208 471 1985




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

UNITED
PERSONAL INJURY ASSOCIATES
*The Car Accident People*

கனடாவில்
30 வருடத்திற்கும்
மேலான அனுபவம்

**உங்களுக்குத் தெரியுமா?**

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாகப் பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**

உங்களால் **$ 172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு **$400.00** வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.



பிழையான அனுபவமில்லாத
ஆலோசனைகளுக்குள்
விழுந்து விடாதீர்கள்

வீட்டுப்பெண்ணை அல்லது குழந்தை பராமரிப்பவரா? வேலை செய்கிறீர்களா அல்லது வேலையில்லையா? பள்ளி மாணவரா? எவராயிருப்பினும் உங்களால் நஷ்டஈடு பெறமுடியும். நீங்கள் சாரதியாக இருந்தாலும் பாதசாரியாக இருந்தாலும் வாகனத்தில் பயணிப்பவராயினும் சைக்கிளில் செல்பவராயினும் இன்னும் [illegible] இருப்பினும் கூட உங்களால் நஷ்டஈடு பெறமுடியும்.

**தமிழ் உட்பட 25ற்கும் அதிகமான மொழிகளில் சேவை வழங்கப்படுகிறது**

பண இழப்பீட்டுத் தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய உடன் தொடர்பு கொள்ளவும்

உங்கள் அறியாமையால்
வாரத்திற்கு **$1000.00** வரை
இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

***இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்***

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 28 King Street E., Unit 7, Kitchener
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main Street E., 1st Floor, Hamilton
- 75 Collier St., Unit A, Barrie

**தீபன் - (416) 505-9804**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களைக் கவருங்கள்

எமது நற்பழக்கவழக்கங்கள் சில வேளைகளில் எம்மை மற்றவர்கள் மத்தியில் பெரும் மதிப்பைப் பெற்றுத் தந்து விடும்.

பழக்கவழக்கங்கள் எதுவும் பிறப்புடன் ஒட்டிக் கொள்வதில்லை. நாமாக பழகிக் கொள்ள வேண்டியவை. ஒருவரிடம் இருந்து இன்னொருவர் பார்த்து நல்லதா கூடாத என்று கணிப்பிட்டு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எப்போதாவது உங்கள் மனைவியை காரில் ஏற்றும் போது காரின் கதவை திறந்து அவரை இருக்கையில் அமர்த்தி இருக்கிறீர்களா?

பெரும்பாலும் இல்லை.

ஒரு பெண்ணை காரில் ஏற்ற சந்தர்ப்பம் கிடைக்கும்போது (அது யாராக இருக்கலாம்) அவர்களுக்கென்று இருக்கும் சில மரியாதை (Respect)களை கொடுத்தே ஆகவேண்டும்.

அவர் இருக்கப்போகும் இருக்கையின் கதவைத் திறந்து அவரை இருக்க வைத்து, இலேசாக கதவை மூடிய பின்னரே நீங்கள் உங்கள் இருக்கைக்கு செல்ல வேண்டும். அது அவர்களுக்குக் கொடுக்கும் மரியாதை மட்டுமல்ல பாதுகாப்பும் கூட.

முயன்று பாருங்கள் பழகிக் கொள்ளுங்கள்.

அடுத்து படிக்கட்டுகளில் (அது தான் stairs) ஒரு பெண்ணுடன் ஏறும்போது கவனிக்க வேண்டிய சிலவற்றைப் பார்ப்போம்.

படிக்கட்டுகளில் ஏறும் போது உங்களுடன் வரும் பெண்ணை முதலில் ஏற விட்டு அவருக்கு ஒரு படி கீழாகவே நீங்கள் ஏற வேண்டும். அவருடன் சமமாக பக்கத்தில் வந்தபடி ஏறுவதைத் தவிர்க்க வேண்டும்.

காரணம்?

ஏதோ ஒரு காரணத்தால் உங்களுடன் வரும் பெண் படிக்கட்டுகளில் தவறி விழுந்துவிட நேர்ந்தால் உடனே நீங்கள் தாங்கிக் கொள்ள முடியும். இதனாலேயே பலர் ஒரு படி கீழாகவே அவர்களைத் தொடர்வது வழக்கம்.

அதேபோல் படிக்கட்டுகளில் இறங்கும்போது நீங்கள் முன்னே இறங்க வேண்டும். இது கூட அதே மாதிரி விழுந்துவிட நேர்ந்தால் தாங்கிக் கொள்ள முடியும்.

இதையெல்லாம் எங்கே ஐயா யோசிக்கப் போகிறோம்? என்கிறீர்களா?

ஆனால் பழக்கப்படுத்திக் கொண்டால் பாதுகாப்பு மயப்படும்.

• எஸ். ராஜ்மோகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே அந்த வெண்ணிலா



தொடர்கதை - முகம்: 1

குரு அரவிந்தன்

தனது கம்பனியின் வேலை நிமிர்த்தம் ஒரு வாரம் நியுயோர்க்கில் அலைந்துவிட்டு ரொறன்ரோ திரும்பிய விக்ரம் பிரயாணக் களைப்புத் தீர சிறிது நேரம் ஓய்வெடுக்க வேண்டும் என்று நினைத்தபடி தனது 'கொண்டோக்' கதவைத் திறந்தான். கதவைத் திறந்து உள்ளே நுழைந்த அவனைப் பார்த்து மூலையில் இருந்த தொலைபேசி மெல்லக் கண்சிமிட்டியது. "உனக்கு ஒரு செய்தி காத்திருக்கிறது" என்று சிவந்த விழிகளை மூடித் திறந்தது. யாருடைய செய்தியாய் இருக்கும்? பிரயாணக் களைப்பையும் பொருட்படுத்தாது அவசரமாகச் செய்தியைச் செவிமடுத்தவன் ஒரு வினாடி அதிர்ந்து போய் அப்படியே நின்று விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செய்தியல்ல, மூன்று செய்திகள் காத்திருந்தன. செய்திகளைச் சேமித்து விட்டு மீண்டும் செவிமடுத்தான்.

"விக்கி....! நீ எங்கே தொலைந்து போய் விட்டாய்? போகும் இடத்தை யாவது சொல்லி விட்டுப் போயிருக் கலாமே? உனக்காக ஒருத்தி இங்கே காத்திருப்பது உனக்கேன் புரியமாட்டேன் என்கிறது. ரொம்ப அவசரம்! நான் எப்படியாவது உன்னோடு பேசவேண்டும்! பிளீஸ் கோல் மீ பாக்...! உன் அழைப்பை எதிர்பார்த்து வீட்டிலே காத்தி ருப்பேன்." மதுநிலாவின் குரலில் பதட்டம் தெரிந்தது.

திகதியைப் பார்த்தான். அந்தச் செய்தி மூன்று நாட்களின் முன் பதிவாகியிருந்தது.

"விக்கி! என்னுடைய அவசரம் உனக் குப் புரியவில்லையா! எங்கேயெல் லாம் உன்னைத் தேடுவது? என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை? நான் பெரிய ஆபத்தில் மாட்டியிருக்கிறேன்! நீ எங்கிருந்தாலும் உன்னோடு அவசரம் பேசவேண்டும்! எப்படியாவது என்னை இந்த இக்கட்டில் இருந்து காப்பாற்றிவிடு! பிளீஸ்... பிளீஸ்... பிளீஸ்...!" அவளது குரல் ஏக்கத்தோடு கெஞ்சியது.

அந்தச் செய்தி இரண்டு நாட்களின் முன் பதிவாகியிருந்தது.

"விக்கி! உனக்காகக் காத்திருந்து ஏமாந்து போனேன்! உன் காதலி மதுநிலா இனிமேல் உன் காதலியல்ல! அவளை மன்னித்துவிடு! முடிந்தால் மறந்துவிடு!" கேவிக் கேவி அழுதபடி அந்தச் செய்தி பதிவாகி இருந்தது.

நிச்சயமாக இது மதுநிலாவின் குரல் தான். "விக்கி!" என்று உரிமையோடு அழைக்கும் போதெல்லாம் அவனது உயிரை வருடிச் செல்லும் அந்தக் கானக் குயிலின் குரல் தான் அது.

"அவளுக்கு என்ன நடந்தது? அவளை நான் மறந்து விடுவதா? ஏன்? எதற்காக அவள் இந்த முடிவெடுத்தாள்?"

அவளிடம் சொல்லாமல் நியூயோர்க் போனதற்காக இப்படிச் செய்தியை விட்டு வேடிக்கை பார்க்கிறாளோ?

சாதாரண நிலையில் இருந்திருந்தால் அவள் பதட்டப்படும் போது, ஏக்கத்தோடு கெஞ்சும் போது, கேவிக்கேவி அழும் போது என்று அவளது குரலைத் திரும்பத் திரும்பக் கேட்டு ரசித்திருப்பான். அந்த சுகத்தில் தன்னை மறந்து மூழ்கியிருப் பான். ஆனால் இப்போ அந்தச் செய்தி வெறும் வேடிக்கை அல்ல என்பதை அவனது உள்மனம் உணர்ந்தபோது அதைக் கேட்டு ரசிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை!

நெஞ்சு "திக்திக்" என்று அடித்துக் கொண்டது. அவசரப்பட்டு ஏதாவது தவறான முடிவு எடுத்திருப்பாளோ?

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். சற்று நேரத்திற்கு முன்பு தான் அந்தச் செய்தி பதிவாகி இருந்தது.

நிதானமாக செற்றியில் உட்கார்ந்து சிந்தித்தான். விரைந்து செயற்பட்டால் ஏதாவது செய்யலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

மதுநிலா கோழையல்ல, பாரதி கண்ட புதுமைப் பெண். சிரித்த முகமும், நிமிர்ந்த நடையும், எதையும் தட்டிக் கேட்கும் துணிவும் கொண்டவள். அவளா இந்த விபரீத முடிவிற்கு வந்தாள்? என்ன காரணம்? இதற்கு யார் காரணம்?

மதுநிலா ஏன் தன்னோடு தொடர்பு கொள்ளவில்லை என்ற கேள்வி அவன் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது. நியூயோர்க்கில் இருந்து தனது தொலை பேசியில் செய்தி ஏதாவது பதிவாகி இருக்கிறதா என்று பார்க்காமல் விட்டதற் காகத் தன்னைத் தானே நொந்து கொண்டான்.

"நோ!" என்று தன்னையறியாமலே சத்தம் போட்டுக் கத்தியவன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதுநிலா நீ எனக்கு வேண்டும்' உன்னை எந்த நிலையிலும் நான் இழக்கத் தயாராய் இல்லை!" என்று சொல்லிக் கொண்டே தனது 'ஜகுவா'ரில் பாய்ந்து ஏறிய வன் மறுகணம் மதுநிலாவின் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தினான்.

நியூயோர்க் போகும் அவசரத்தில் மதுநிலாவின் வீட்டிற்கு அன்று அவன் தொலை பேசியில் தொடர்பு கொண்ட போது மதுநிலாவின் அப்பா தான் அவனுக்குப் பதிலளித் தார். அவரிடம் நியூயோர்க்கில் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்திருந்தான். மதுநிலா விடம் செய்தியைப் பரிமாறுவதாக அவர் வாக்குக் கொடுத் திருந்தார். மறுநாள் நியூயோர்க் கில் இருந்து அவன் அழைத்த போதும் அவர்தான் பதிலளித் தார். மதுநிலா வெளியே போயிருப்பதாகவும் அவள் வந்ததும் அவன் அழைத்த தாக அவளிடம் சொல்வதாக வும் உறுதியளித்திருந்தார்.



மதுநிலாவின் செய்தியின் படி அவர் அவளிடம் நியூயோர்க் தொலை பேசி இலக்கத்தைக் கொடுக்கவில்லை' கொடுத் திருந்தால் நிச்சயம் அவள் அவனை அங்கே அழைத்திருப்பாள். அவன் அங்கி ருந்து அழைத்ததாகவும் அவளிடம் அவர் சொல்லவில்லை'

அப்படியானால் ஏதோ நடந்திருக் கிறது' இதில் எங்கேயோ ஏதோ தவறு இருக்கிறது'

மதுநிலாவின் பிரமாண்டமான அந்த வீட்டை அவன் அடைந்தபோது அவளது வீட்டு வாசலுக்கு முன்னால் நாலைந்து கார்கள் நிறுத்தப்பட்டிருந்தன. சிலர் வாசலில் கூடி நின்று பரபரப்பாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

'என்ன இது? இங்கே என்ன நடக்கிறது?' எதுவும் புரியாமல், மனத்தில் பயம் பிடித்துக் கொள்ள காரை விட்டு இறங்கக்கூட மனமில்லாமல் அவன் தனக்குள் குழம்பினான்.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கை

பொதுவாக எம் குழந்தைகள் 5, 6 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலை போய் வீடு வந்த பின்பு தமது வீட்டுப்பாடங்கள், செய்வதும், தொலைக்காட்சி பார்ப்பதும், சகோதரர்களுடன் விளையாடுவதும் சாதாரணமாக செய்வார்கள். வீட்டுப் பாடங்கள் செய்தவற்கு உதவிகளை நாடியும் முடித்துவிடுவார்கள்.

அங்கே பெற்றோர்கள் பாடசாலை நாட்களில் அவர்கள் வந்தவுடன் மேற்குறிப்பிட்ட விடயங்கள் செய்வதற்கு அனுமதி எடுப்பார்கள். அதே நேரம் சில சில சிறு வேலைகளை அவர்கள் மூலம் செய்யப்பழக்க வேண்டும். பாடசாலையால் வந்துவிட்டார்கள். களைத்துவிட்டனர் என கூறி அவர்கள் உண்மையில் உசாராக இருந்தாலும் பெற்றோர் அவ்வாறு கூறி பிள்ளைகளை சோம்பல் தனத்திற்கு ஆளாக்கிவிடுவதும் நடைபெறுவதுண்டு.

வீட்டிலே அவர்கள் தமது உடைகளை மடித்து வைத்தல், புத்தங்களை ஒழுங்காக அடுக்கி அமைத்து வைத்தல் போன்ற சிறு விடயங்களை அவர்கள் மூலம் செய்வித்து பழக்கவேண்டும். காலையில் பாடசாலை போகும்போது தாமாகவே ஓரளவு வளர்ந்த பிள்ளைகள் உடைகளை போடவும், சப்பாத்து 'சொக்ஸ்' போன்றவற்றை போடவும் என அவர்களை சுயமாக செய்வதற்கு இடம் கொடுத்தல் உண்மையில் பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையினையும் சுயமாக எதையும் செய்யவேண்டும் என்ற ஆவலையும் தூண்டிவிட ஏதுவாக இருக்கும்.

சில குடும்பத்தில் பெற்றோர் அளவிற்கு மிஞ்சிய செல்லம் அல்லது பாசம் காரணமாக பிள்ளைகளை குனிந்து துரும்பு கூட எடுக்கவிடாமல் எல்லாவற்றையுமே தாம் செய்துவிட முனைவதில் பிள்ளைகள் அம்மா, அப்பா எல்லாமே செய்து விடுவார்கள் என்ற ஒரு எண்ணத்தினை சிறுவயதிலேயே மனதில் பதிய வைத்து விடுவார்கள். இதனை சற்று மாற்றி பிள்ளைகளை சில விடயங்களில் சுயமாக இயங்க விடவேண்டும். குழந்தைகளுக்கு உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலை அல்லது வேறு ஏதாவது சூழ்நிலைகள் ஏற்படும் நிலையில் நிட்சயமாக அவர்களுக்கு நாம் தான் எல்லாம் செய்துவிடவேண்டும். அதை விடுத்து ஆரோக்கியமாக இருக்கும் குழந்தைகளை அவர்களின் வேலைகளை சுயமாக அவர்கள் செய்தவற்கு பெற்றோர் ஊக்கம் கொடுத்தால் பெற்றோருக்கும் நல்லது தானே. குழந்தைகளுக்கும் சிறப்புத் தானே.

தன்னம்பிக்கையினை வளர்த்து விடுவோமே.

நன்றியுடன் - ஆதிஜா

*'லண்டன் ரைம்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானிலம் போற்றும் நல்லாசிரியர் டாக்டர் இராதாகிருஷ்ணன்

ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்தவர், 'தத்துவ மேதை' எனப்படுபவர். தம் பிறந்த நாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாட விரும்பியவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆவார்.

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற ஐயனின் வாக்கின்படி 1888ம் அண்டு புரட்டாதி 05ம் நாள் திருத்தணியில் திரு. வீராசாமி ஐயா, சீதம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியைத் திருத்தணியிலும், திருப்பதியிலும், உயர்கல்வியை வேலூரிலும், சென்னையிலும் கற்றுத் தேர்ந்தார்.

பின்பு சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகத் தம்பணியைத் தொடங்கினார். பின்னர் அதே கல்லூரியில் தத்துவப் பேராசிரியரானார். தம் கனிவான தோற்றத்தாலும், கற்பித்தல் திறத்தாலும் மாணவ உள்ளங்களை கொள்ளை கொண்டார். பின் மைசூர்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.

இவர் ஆங்கிலத்தில் மடை திறந்த வெள்ளமாய்ப் பேச வல்லவர். இதனையறிந்த பிரிட்டிஷ் அக்கடமி இவரைச் சொற்பொழிவாற்ற அழைத்தது. ஆசியக் கண்டத்திலிருந்து அக்கடமியில் பேச முதன் முதலில் அழைக்கப்பட்டவர் இவரே. உலகப் பல்கலைக்கழகங்கள் இவருக்கும் 17 முறை 'டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்தன.

அன்னார் ஆசிரியப் பணியுடன் நாட்டு விடுதலையிலும் நாட்டங் கொண்டு அண்ணல் காந்தி, நேரு போன்ற தலைவர்களுடன் இணைந்து போராடினார். சுதந்திர இந்தியாவில் இரண்டு முறை இந்தியக் குடியரசின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார். 1962ல் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவராகப் பொறுப்பு வகித்தாலும் தாமோர் ஆசிரியர் என்பதிலேயே பெருமைப்பட்டார். அவர் விருப்பப்படியே அவரது பிறந்தநாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளில் நல்லாசிரியர்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசில்களும் வழங்கப்படுகிறது. 1997 முதல் இவ்விருது 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' என்றே அழைக்கப்படுகிறது.

மத்திய அரசு இவருக்குப் 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமை கொண்டது. மாநில அரசும் சென்னைக் கடற்கரை முதல் அண்ணா மேம்பாலம் வரையிலான சாலைக்கு இவர் பெயரையே சூட்டியுள்ளது. உலகம் போற்றும் இம் மேதை 1975ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 17ஆம் நாள் இயற்கை எய்தினார். மாமேதை மறையினும் அவர் புகழ் மறையாது.....!!!

**கோவை ஜெயந்தி**
ஜேர்மனி

*'லண்டன் ரைம்'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டதும் கேட்டதும்

# என் நினைவோடு மீட்டிப் பார்க்கிறேன்

வ. பாலகிருஷ்ணமூர்த்தி
*B. Dev. (Special)*
*(State & Foreign Servicrs)*

மீளமுடியாத கனவுகளாக எம் மனதில் நிலைத்து நிற்கும் எண்ணங்கள் செயல்வடிவம் பெறுகின்றபோது, நாம் மலைக்கின்றோம். எண்ணமுடியாதவை எம்மை வந்தடையும்போது, வாழ்வின் அதிர்ஷ்டத்தை நினைத்து திகைக்கின்றோம்.



பொதுஜனதொடர்பாளர்கள், கலை இலக்கிய விமர்சகர்கள், வானொலி அறிவிப்பாளர்கள் அல்லது ஒலிபரப்பாளர்கள், தொலைக்காட்சி ஒலிபரப்பாளர்கள், மேடை நடிகர்கள், எழுத்தாளர்கள் என நாம் வகுத்துக்கொண்டு போனாலும் நட்சத்திர அந்தஸ்து என்பது எல்லாருக்கும் கிடைத்து விடுவதில்லை. சினிமா நட்சத்திரங்களாக மக்களிடையே செல்வாக்குப் பெறும் அளவுக்கு, ஒரு வானொலி அறிவிப்பாளனுக்கு, ஒரு ஒலிபரப்பாளனுக்கு நட்சத்திர அந்தஸ்து கிடைப்பதென்பது அருகியிருந்த காலமுண்டு. ஆனால் தற்போது நேயர்களைக் கவரும் குரல்வளம், குரல் கவர்ச்சிக்காகவே அவர்களைக் கவரும் காலம் - நட்சத்திர அந்தஸ்து என்பதெல்லாம் வந்துவிட்டது.

வானொலி ஒலிபரப்பாளர்கள், தொலைக்காட்சி ஒலிபரப்பாளர், மேடை நடிகர், தொகுப்பாளர், எழுத்தாளர் என அடுக்கிக் கொண்டு செல்லும் பாரிஸ்டர் விமல் சொக்கநாதனை நான் சந்திக்கிறேன்.

வடபுலம் யாழ்ப்பாணத்தில் கொக்குவிலில் பிறந்து வளர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்று கொழும்புக் கல்லூரியில் கல்வி தொடர்ந்த கவர்ச்சிக் குரலுக்குரிய விமல் சொக்கநாதன் அவர்களை நான் நேர் கண்டதையும், கேட்டதையும் உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நினைவுகளை மீட்டிப்பார்க்கிறேன். அவரது எண்ணங்கள், கற்பனைகளை வருடிப் பார்க்கிறேன். கல்லூரி விடுமுறையின்போது கொழும்பிலிருந்து கொக்குவில் செல்லும் அந்த 'இரவு தபால் ரயில் வண்டியில் புறப்படும் பயணத்திலிருந்து ஆரம்பித்தார்.

'கொக்குவிலின் அந்தச் சின்னஞ் சிறு ரயில் நிலையத்திற்கு தன் குடும்பத்தோடு வந்திருந்தபோதும், அவர்களை எதிர்நோக்கி அழைத்துச் செல்லும் உறவுகள், அவர்களின் இன்முகங்கள் அவரது மனதில் ஆழப்பதிந்துவிட்ட நினைவுகள் அவை'.

"கொக்குவில் அச்சுக்கூடத்து ஒழுங்கையில் என் பாட்டியார் வீடு இருந்தது. அதிகம் சொல்வானேன். கொக்குவிலின் அத்தனை வீடுகளுமே அப்போது என் உறவினர் வீடுகள். அவர்கள் அனைவரையுமே ஒரு சுற்று கூடிக்குலாவி வர என் விடுமுறை முடிந்துவிடும். இன்று அந்த வீடுகளின் விழுதுகள், என் மைத்துனர், மைத்துனிகள், என் மருமக்கள் பலரும், பல கண்டங்களில் பல நாடுகளில் தொலைதூரத்தில் பிரிந்து வாழ்வது என் மனதை நெருடுகிறது" என்றார்.

வானொலி நிலையத்துள் அடியெடுத்து வைத்ததையும் வானொலி அனுபவத்தையும் வினவியபோது......

அவர் "கொக்குவிலின் அச்சுக்கூடத்து என் தாய்வழி பெரிய தாயார் பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவன் அவர்கள் இலங்கை வானொலியில் ஒரு நிகழ்ச்சிக்காக கொழும்பு வந்திருந்தார். கல்வி ஒலிபரப்பின் நிகழ்ச்சிக்காக என்னையும் அழைத்துச் சென்றார். இலங்கை வானொலி நிலையத்தினுள் அவருடன் நான் காலடி எடுத்து வைக்கும்போது வயது ஏழு இருக்கும். அந்தவேளை சுபவேளை என்னவோ? அதன்பின் வானொலி நிலைய ஒலிவாங்கியை நான் கீழே வைத்தது கிடையாது" என்றார்.

பாலர்கழகம், சிறுவர்மலர், மாலை மதியம், இளைஞர் அரங்கு என்று பல் வேறு நிகழ்ச்சிகளிலும் தனக்கு வாய்ப்பு வந்தது பற்றியும், ஒலிபரப்பு மேதைகள் திருமதி பொன்மணி குலசிங்கம், வீ. சுந்தரலிங்கம், திரு. குஞ்சிதபாதம், காலஞ்சென்ற சில்லையூர் செல்வராஜன் ஆகியோர் தன்னை வழிநடத்த, அப்போதைய தமிழ் நிகழ்ச்சி அதிகாரி அமரர் கலாநிதி கே. எஸ். நடராஜா (நாவற்குழியூர் நடராஜன்) அவர்களினால், பகுதிநேர அறிவிப்பாளராக தெரிவு செய்யப்பட்டதை கரும்பு தின்ன கைக்கூலி தரப்பட்டது" போன்ற சம்பவம் என்றார்.

சட்டக்கல்லூரி மாணவனாக அவர் இருந்தபோதும், புகழ்பெற்ற நாடக மேடைகளிலும் நடித்து வந்திருந்தார். அப்போது தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாக இருந்த K. S. நடராஜா அவர்கள் பொறுப்பான நிகழ்ச்சிகள் பலவற்றை விமலிடம் ஒப்படைத்திருந்தார். 'கண்டதும் கேட்டதும் - செய்திச்சுருள்', தொழிலாளர்களை நேரில் சந்தித்து பாடல் தெரிவுகளை அறியும் 'தொழிலாளர் வேளை' நிகழ்ச்சிகள் எனப்பல. தமிழறிஞர் கி. ஆ. பெ. விஸ்வநாதன் பொள்ளாச்சி மகாலிங்கம், சௌகார் ஜானகி, பத்மினி, சோ, மனோரமா இப்படிப்பல பிரமுகர்களையும் வானொலி நிகழ்ச்சிகளுக்காக சந்தித்திருந்தார்.

மறக்கமுடியாத சம்பவத்தை விசாரித்தபோது இலங்கை வானொலி கண்டதும், கேட்டதும் நிகழ்ச்சிக்காக முக்கிய பிரமுகர் இலங்கையின் அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கா யாழ்ப்பாண விஜயத்தின்போது அவரது வண்டியின் பின், வானொலி பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஜீப் வண்டியில் விவசாய சுற்றுலாவில் 4 நாட்கள் பயணம் செய்ததும், அவரோடு அறிமுகமான சம்பவத்தையும் குறிப்பிட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டப்படிப்பை கொழும்பு சட்டக் கல்லூரியில் முடித்துக்கொண்டபோது, இலங்கை வானொலியின் வர்த்தக சேவையில் நிரந்தர அறிவிப்பாளராக பதவியை பெற்றுக் கொண்டார். வர்த்தக ஒலிபரப்பில் "இசையும் கதையும்", "என் விருப்பம்", "அறிவிப்பாளரோடு அரைமணிநேரம்" போன்ற நிகழ்ச்சிகள் அவரது குரலுக்கும், அழகு தமிழுக்கும் முத்திரை பதித்தவை. 1976ம் ஆண்டில் கொழும்பு சட்டத் தொழிலையும், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் பதவியையும் விட்டு லண்டனுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்று சட்டத் தொழில் புரிந்துவரும் அவருக்கு, உலகத் தமிழரை ஒன்றிணைக்கும் நாட்டுடன் நாடு, நல்லுறவு பேசும் லண்டன் BBC தமிழோசை மேலும் உலகத் தமிழரோடு ஒன்றிணைக்க களம் அமைத்துக் கொடுத்தது.

பாரிஸ்டர் விமல் சொக்கநாதன் அவர்களுக்கு, தகமை அறிந்து, அவர்தம் சேவை அறிந்து விருதுகள் வழங்கி கௌரவிக்கும் 'தமிழர் தகவல்' ஆசிரியர் திரு அவர்கள் கடந்த பெப்ரவரி 12ம் திகதி கலை, இலக்கிய, வெகுஜன தொடர்புசாதன சேவைக்கான "தமிழர் தகவல்" சிறப்பு விருதுடன் கலாநிதி K.S. நடராஜா அவர்கள் நினைவாக தங்கப்பதக்கமும் சூட்டி கௌரவிக்கப்பட்டது மிகப் பொருத்தமே.

கொழும்புரேடியோ, இலங்கைவானொலி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என வளர்ந்த அந்த வானொலிக்குத்தான் எவ்வளவு காந்தக் கவர்ச்சி. அதனுள் நுழைய முற்படுவோர் பலர். ஆனால் பலருக்கு சந்தர்ப்பம் தானாக வந்து விடும், சிலர் கஷ்டப்பட்டே அந்த சந்தர்ப்பத்தை எய்துகின்றனர். மேலும் சிலர் எந்த முயற்சி எடுத்தும் கிட்டுவது கஷ்டம். எனக்கும் என் சகோதரியுடன் இலங்கை வானொலி நிலையத்துள் மாணவனாக நுழைய 'சைவசமயப் பாட-சாலை' என்ற நிகழ்ச்சி காலாக இருந்தது. அதன்பின்பு இளைஞர் மன்றம், மாலைகீதம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுடனே நண்பர் அப்துல் ஹமீட் அவர்களுடன் இணைந்த அனுபவம், வானொலி எனும் அந்தச் சமுத்திரத்தினுள் நுழைய வழிவகுத்ததை என் நினைவில் மீட்டிப்பார்க்கிறேன்.

தமிழோசையின் பிரபல அறிவிப்பாளர் திரு. விமல் சொக்கநாதன் அவர்கள் அறிவிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், நிகழ்ச்சி பொறுப்பாளர்கள், செய்தியாளர்கள் அனைவரையும் இணைத்து ஒலிபரப்பாளருக்கு ஒரு பட்டறை (Works hop) நடத்தி, தன் அனுபவத்தையும், ஒலிபரப்புத்துறைக்கு வேண்டிய 'தகைமைகளை'யும்தந்து புடம் போடவைத்தார். Thames நதிக்கரையிலிருந்து வந்த "சங்கர் அண்ணாவின்" நினைவோடு 'நாடுபோற்றும் நல்ல ஒலிபரப்பாளன்' விமல் சொக்கநாதன் அவர்கள் சிறப்பான பணிகளை வாழ்த்தி விடைபெறுகிறேன். ●

## அனுபவ மொழிகள்

'லண்டன் ஹரன்'

நீங்கள் ஒரு முயற்சியிலுமே
துணிந்து இறங்காதவரை
உங்கள் திறமைகளை நீங்கள்
ஒருபோதும் அறியமுடியாது...'

நாங்கள் சொல்லும்
ஒவ்வொரு பொய்யுக்கும்
ஒவ்வொரு பல்லை பிடுங்கிவிடு என்று,
நாட்டில் சட்டம் போட்டால்
நாட்டில் ஒருவருக்குமே
பல்லு இருக்காது'?

நம் மனதில் ஏற்பட்ட
ஒவ்வொரு புண்ணுக்கும்
காலம் தான் நல்ல மருந்து.

ஆகன் - எஸ். பரம், ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ரோஜா டக்ளஸ்**

## மலரும் அரும்புகள்

ரோஜா 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவி. தியாகி திலீபன் நினைவுநாள் இவள் பிறந்தநாள். அலையோசையின் இரண்டாவது ஆண்டு கால்பதிப்பில் மார்க்கம் தியேட்டரில் அரங்கேறிய அலை மாலைப்பொழுதில் ரோஜா ஆடிய பாம்பு நடனம் சிறப்பு வரவேற்புப் பெற்றது. இளவயதில் அவரின் திறமையை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தவேண்டும் என்ற நோக்கில் 'ரோஜா' சஞ்சிகைக்காக அவரையும் அவரது பெற்றோர்களையும் சந்தித்தேன். அவர்களுடன் பேசும் போது கிடைத்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

ரோஜா நடனத்தில் மட்டுமல்ல ரொறன்ரோவில் ஒரு சிறந்த ஓட்ட வீராங்கனை. விளையாட்டை நேசிக்கும் குடும்பத்தில் பிறந்த ரோஜா வீராங்கனையாகத் திகழ்வதில் ஆச்சரியமில்லை. அவரிடம் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கள் வந்த வேகமே ஒரு ஓட்டப் போட்டி போலத்தான் இருந்தது. 'படக்' 'படக்'கென பதிலளிக்கும் ரோஜா கனடாவில் பிறந்தாளும் நன்றாக தமிழ் பேசுவார். அதற்குக் காரணம் தன் அம்மாதான் என்று பெருமையாக சொல்லிக்கொண்டார்.

"அம்மாவுக்கு தமிழில் நல்ல பிரியம்; அதனால் அடிக்கடி தமிழில் கதைக்கு மாறு சொல்லிக்கொள்வா..."

ஓட்டப்போட்டிகளில் பங்குபற்றிய அனுபவத்தை என்னோடு பகிர்ந்து கொண்டார்.

"100, 200 மீட்டர் ஓட்டங்கள், நீளம் பாய்தல், 400 மீட்டர் அஞ்சல் ஓட்டம் போன்றவற்றில் விரும்பி பங்குபற்றுவேன். உலகத்தமிழர் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் ரொறன்ரோவிலும், மொன்றியலிலும் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தொடர்ந்து 'சம்பியன்'ஆக வந்தேன். இதைவிட ரொறன்ரோ பாடசாலைகளின் சார்பில் ஓடியபோது 100 மீட்டர், 400 மீட்டர் ஓட்டங்களில் வெண்கலப் பதக்கங்களையும், 4x100 மீட்டர் அஞ்சல் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், 4x400 மீட்டர் அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றேன்" என்று சாதாரணமாகவே கூறிவிட்டு சிரித்தார்.

ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று பரிசு பெறும் போது எப்போது அதிக மகிழ்ச்சி அடைந்தீர்கள்?

"அண்மையில் ஒன்ராறியோ மாகாணத்திற்கான 4x100 மீட்டர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றி முதலாவது இடத்தைப் பெற்றபோது....; அதைவிட அதில் சகலதுறைக்கான 'சம்பியன்' பட்டத்தைப் பெற்றபோது....; காரணம் உள்ளூர் பாடசாலைகளுக்கான போட்டிகளில் பங்கு பற்றிய நான் மாகாண ரீதியில் பங்கு பற்றி பரிசு பெற்றது மகிழ்ச்சிக்குறிய விடயம்தானே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான்; வேறு எதாவது விளையாட்டுகளில் பங்குபற்றியிருக்கிறீர்களா?

"உதைபந்தாட்டம்; எனது அப்பா ஒரு விளையாட்டு வீரர். அதைவிட எங்கள் உதைபந்தாட்டக் குழுவுக்கு பயிற்சி தருபவர். அவரின் கீழ் பயின்ற நான் All Star Teamக்குத் தெரிவு செய்யப்பட்டு கடந்த வருடம் 3 உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றினேன்."



ரோஜா படிப்பிலும் சிறப்பான இடத்தில் இருக்கிறார் என்பது பாராட்டுக்குரியது. அவர் அண்மையில் 'சுற்றாடலும் மாசும்' என்ற தலைப்பில் கனடாவில் நாடளா விய ரீதியில் நடந்த ஆய்வில் பங்குபற்றி திறைமையாக செயற்பட்டதற்காக National Award கிடைத்ததை பெருமை யாக கூறினார்.

மற்றைய துறைகள் பற்றியும் பொழுது போக்குகள் பற்றியும் குறிப்பிடும்பொது...

"எனக்கு நடனம் பிடிக்கும். கடந்த சில வருடங்களாக பரதநாட்டியம் பயின்று வருகிறேன். அதை முறையாக கற்று அரங்கேற வேண்டும் என்பது என் ஆசை. சங்கீதம் பிடிக்கும்; தமிழ் பாடல் களைக் கேட்டு அதை மீண்டும் பாடிப் பார்ப்பேன். எங்கள் குடும்ப நண்பர்கள் நல்ல குரல் வளம் இருப்பதாக சொல்வார்கள். இருப்பினும் வளரச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பது கவலைதான்."



உங்களுக்கு ஏதாவது கனவு அல்லது சாதிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?

"எனது கனவு எனது நாட்டுக்காக ஓடி வெற்றி பெற வேண்டும்; எல்லாத்துக்கும் மேலாக நன்றாகப் படித்து வழக்கறிஞராக வரவேண்டும்."

பெற்றொரின் ஊக்கத்தால் வெற்றிகளைக் காணும் ரோஜா, இளைய தலை முறையினருக்கு ஒரு நல்ல உதாரணமாக திகழ்கிறார். அவர் கனவுகள் நிறைவேறி சிறந்த தமிழ் மகளாக வாழ "ரோஜா" பல்சுவை இதழ் வாழ்த்தி நிற்கிறது.

● திருமலைச் செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோ - கனடிய உறவோடு சர்வதேச மலர்

## 'ரோஜா'வின் எண்ணம்....

கனடிய புலப் பரப்பில் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்து இதழ் விரித்து, தமிழோடு பல்சுவை வண்ணப் படைப்புகளை நிறைதரு நறுமணங்களாக உங்களோடு பகிர்ந்து நின்ற ரோஜா சஞ்சிகை, இந்த ஆண்டு கனடாவையும் தாண்டி ஐரோப்பாவிலும் இலங்கையிலும் தடம் பதித்திருக்கின்ற மகிழ்ச்சியான தகவலையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

ரோஜா வெளியீட்டகம், கனடா அலையோசை வானொலி - லண்டன் First Audio கலையகம் இணைந்த படைப்பகங்களாக ஒன்றிணைந்து, "யூரோ - கனடிய உறவோடு சர்வதேச மலராக" இனி உங்களை கிரமமாக ரோஜா வந்து சேரும்.

வழமைபோல தமிழ் உணர்வும், வளமும், அறிவியலும் இணைந்து நாற்றமிழாக படைப்பாக்கங்கள், ரோஜாவின் இதழ்களாக தொடர்ந்து வெளியாக்கம்பெறும். வழமையான கனடிய எழுத்தாளர்களின் படைப்பு களும் அதே வளத்தோடு இணைந்து வரும்.

மேலும், லண்டன் First Audio கலையகத்தின் நிகழ்ச்சி வடிவமான -லண்டன் ரைம்- நிகழ்ச்சிக்காக வளர்ந்த, வளரும் எழுத்தாளர்கள், ஆக்க தாரர்கள் மற்றும் சிறுவர்கள் வாரா வாரம் எழுதுகின்ற பொதுத் தலைப்பு ஆக்கங்கள், கவிதைகள், இலக்கியச் சிந்தனைகள், சிறுகதை இப்படி மேலும் பயன்தரு சொந்த ஆக்கங்கள் பலவும், சுழற்சி முறையில், 'யூரோ - கனடிய உறவோடு, சர்வதேச மலர்' -ரோஜாவில் பதிவாக இருக்கின்றன.

அத்தோடு தொடர்ந்து வரும் இதழ்கள் தமிழர் வாழும் நாடுகளின் சிறப்பைக்கொண்டு அந்த நாட்டின் சிறப்பு மலராக வெளிவர இருக்கின்றன. கனடிய - ஐரோப்பிய புலப்பரப்பிலும், இலங்கை, மலேசியா போன்ற நாடு களிலும் உங்களை வந்தடையும் இந்த இணைந்த வெளியாக்கத்திற்கு, உங்களின் மனமொன்றிய ஆதரவினை வேண்டி நிற்கின்றோம்.

எழுத்தார்வம் மிக்கவர்கள், படைப்பாளிகள், ஆய்வாளர்கள், ஓவியர்கள், உங்கள் பங்களிப்பை தயக்கமின்றி ரோஜாவில் இணையுங்கள். தடைகள் பல தாண்டி, புதிய நம்பிக்கையோடு 9வது ஆண்டில், "யூரோ - கனடிய உறவோடு சர்வதேச மலரான 'ரோஜா' இனி உங்கள் உறவுத் தமிழ் மலராக, தங்கு தடையின்றி தமிழ் மணம் பரப்ப, அன்புறவுகளிடம், நிறை வான அளவில் முழு ஒத்தாசை வேண்டி விடைபெறுகின்றோம்.

ஆசிரியர் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரில் ஏறும் மாரி அம்மன்!

தேரில் ஏறி அன்னை முத்துமாரி
திக்கு நாலும் வலம் வந்து வாவி
பாரில் உயர் இலண்டன் நகர் மேவி - ரூட்டிங்
பதியில் இருந் அருள் புரிவாள் வாரி
ஊரும் வண்ண எழில் கோல தேரில்
ஒளிரும் அவள் விழியில் அருள் ஊறும்
சீர் அழகி வதனம் அருள் கோலம் - தன்னை
சேர்ந் அணைவோர்க் அருள்புரியும் நாளும்.
வண்ண எழில் முத்துமாரி தாயவள் - பக்தன்
வடிவத்தில் கலை ஊட்டி பேசிடுவாள் வாயால்
கண் எதிரே ஓடும் இந்த தேரை - பாரும்
காட்சிதந்து கட்ட வைத்த அன்னை அவள் சீதை,
ஈழமணி நாட்டில் தேர் ஆக்கம் - செதுக்கி
எடுத்து இங்கு கொண்டுவர அன்னை தந்தாள் ஊக்கம்
ஆள ஈழம் அடிமை கொண்டார் மண்ணில் - இன்று
அன்னை ஆட்சி புகழ் ஒளிர்வு விண்ணில்
தமிழ் வளர கல்வி பிற சேவை - ஈழ
தாயகத்தில் துயரிடையே நின்று தவிப்போரை
உமிழ் தருவாள் நிதியம் தான் தந்து
உய்ய வைப்பாள் தாம் இழந்த தனிநாடு வென்று
வேலை வீடு என்ற லண்டன் வாழ்வு - என்றும்
விரக்தி, இன கலப்பு, தமிழ் அடையாளம் வீழ்வு
கோல எழில் தேவி முத்து மாரி - தேரில்
கொலு இருந்து அருள்வாய் ஈழம் மிளிர சீரில்..

- ப.வை. ஜெயபாலன் - லண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தொளி நீ

தத்தி நடைபயின்ற தமிழ்க்குழந்தை இலண்டன் ரைம்மே!
சித்திரப் பாவை என சிறப்பாக ஈரிரண்டு ஆண்டு கடந்தாய்!
எத்திக்கும் உன் புகழ்பரப்பி உன்நாமம் பொறித்தாய்!
முத்துச் சர ஓசையென கலகலக்கும் இலண்டன் ரைம்மே! வாழி!
நித்தம் நீ புது மெருகுடன் புதுப்பொலிவு பெற்றே
புத்தம் புது மலராகவே என்றும் நீ மிளர்வாய்!

சிறுவர் மனம் சிறக்க மற்றவர் மகிழ்வுற
அறுசுவை உணவை விருந்தாக்கி அளித்தே
இறுமாப்புடன் வெற்றிக்கொடி கட்டிநிற்கும் - நீ
குறுகுறு நடை தவிர்த்து எட்டியடி வைக்கத் தொடங்கி
நறுமணமலர் பல சேர்ந்த ஒரு பூச்செண்டு போல்
சிறுவர்கள் சேர்ந்த மலர்த்தோட்டம் நீ தானோ?

இலண்டன் ரைம்மே! இணையற்ற பொக்கிஷமே!
இல்லங்களில் உன் மணம் வீசி நிற்கின்றாய்!
நலமாக உன்கலையகத்தில் நல்லதிறமை கொண்ட
செல்லக்குரலும் தேர்ச்சியான குரல் வளங்களும்
எல்லாமே இணைந்திட்ட பல்சுவை அரங்கம் நீ
அனைத்து அறிவிப்பாளர்களுக்கும் அவர்தம் பணிக்கும்
அணையா விளக்கான ஏபிசி வானொலிக்கும்
இணைந்து நின்று மெருகூட்டும் அன்பு நேயர்களுக்கும்
இலண்டன் ரைம்மின் நான்காவது ஜனன தினத்திலே
அள்ளி வழங்குகிறோம் இனிய வாழ்த்துகள் தனையே

இலண்டன் ரைம்மிலே இணைந்திடவே என்றும்
பலமாக உற்சாகம் தந்து என்னாக்கம் இணைந்திட
வலக்கரமாக இருந்திட்ட அனைவருக்கும், விமர்சகர்களுக்கும்
பலதரம் என்னை ஊக்குவித்த தோழி நகுலாவுக்கும்
இன்றிந்தப் பொன்னாளில் நன்றி பல கூறி
இலண்டன் ரைம் குழந்தையே! களஞ்சியமே!
புலம் பெயர் சிறுவருக்கு நீ ஒரு புத்தொளியே - என்றும்
நலம் பெற ஐந்தாண்டுப் படியில் அடி வைப்பாயே!

வாழ்த்துபவர்

- திருமதி விக்னா பாக்கியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழ் வானொலியே!

இங்கிலாந்தின் வானொலியே இனிய தமிழ் வானொலியே
இங்கிதமாய் காலையிலே வலம் வந்துவிடும் வானொலியே
தமிழர் இல்லங்கள் தோறும் தவழ்ந்து விடும் வானொலியே
அருமையாக அறிவிப்பாளர்களை கொண்டு நிற்கும் வானொலியே
அறுபது மணித்துளியில் அற்புதங்கள் படைக்கின்றாய்
ஆறிலிருந்து 60 வரை கேட்பதற்காய் வருகின்றாய்

பல்சுவையாய் நிகழ்வுகளை பல்குரலில் தருகின்றாய்
பயின்று வரும் சிறுவர்க்கு ஊக்குவிப்பு கொடுக்கின்றாய்

வானொலிகள் பலதோடும் கரம்கோர்த்து மகிழ்கின்றாய்
காற்றலையில் கலந்தபடி திக்கெல்லாம் செல்கின்றாய்

மொத்தத்தின் உன் சேவை நாட்டிற்கு தேவை என்போம்
மொழி வளத்தை வளம்படுத்தும் உன் திறமை வாழ்க என்போம்

- ஆதிஜா - மொன்றியல்

# தமிழ்பணி வளர்க!

நான்கு ஆண்டுகளை பூர்த்தியாக்கி ஐந்தாம் ஆண்டில் காலடி வைக்கும் எங்கள் 'இலண்டன் ரைம்' குழந்தை மேன்மேலும் பல ஆண்டுகள் நிறைவாக வளர்ந்து தமிழ்மணம் கமழ்ந்து. பார்புகழ் வளமுடன் இனிதாக வாழ என் வாழ்த்துகள்.

எல்லா நிகழ்ச்சிகளுக்கும் உயிர்கொடுத்து வளமுடன் செய்யும் பெஸ்ட் ஓடியோ (First Audio) அனைத்து கலைஞர்களுக்கும், ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கும் நேயர்களுக்கும், அன்பான சிறுவர்களுக்கும் தமிழ் மணம் எல்லா மழலைகளுக்கும் நன்றாக வரவும், எழுதவும், பேசவும் நம் கலாசாரம் சிறுவர்கள் மூலம் வளரவேண்டுமென பல இன்னல்களை தாங்கி அரும்பாடுபட்டு தமிழுக்காக பாடுபடும் திரு நடா மோகனுக்கும், அனைத்துக் கலைஞருக்கும் எங்கள் வாழ்த்துகள். மேலும் மேலும் பெஸ்ட் ஓடியோ கலையகம் எத்தனை எதிர்ப்புகள் எத்தனை இன்னல்கள் வந்தாலும் வெட்ட வெட்ட தழைக்கும் மரம்போல் உன் இலட்சியமே ஒரே பார்வையாக கொண்டு செயல்படு உன் முன்னேற்றத்திற்கு எல்லா இலண்டன் ரைம் அபிமான நேயர்களும் கை கொடுப்பார்கள். இது நிச்சயம். மேலும் உன் தமிழ்பணி வளர்க, வாழ்க, வளமுடன் சீரும் சிறப்புடன் இனிதாக வாழ வாழ்த்துகிறோம். என்றும் உன் அபிமான நேயர்

- திருமதி லதா யோகநாதன் - சுவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களே வாழ்க!

வசந்த வரவிற்கு தலை சாய்ந்தது காலை
வண்ணத் தமிழாய் பாயுது தேம்ஸ் நதி மேலே
அதில் நீராடிச் சிலிர்க்குது இலண்டன் ரைம் சோலை
உன்னோடு வளர்ந்தது என் கவிமாலை

தலை கீழாகக் குதிக்குது உன் வானலை
கலைப் பூக்களாய் கொட்டுது பூமி பார்த்து
மயங்கிய மலர்களில் துளிர்க்குது தமிழ் மணம்
மகரந்தக் கலவையாய் வானொலிக் கலைஞர்கள்

பல கோணங்களிலும் கோலாகலமாக மோகன்
வலம் வரும் பக்குவம் ஆளுமையின் இமயம்
ஆயிரங் கனவுகள் ஒருங்கிணைந்த சங்கமிப்பு
ஆல விருட்சமாய் பரந்தன பல விழுதுகள்

வாழ்க்கை கனவுகளில் இரவு பகலாக ஓடி
வானளாவி உன் மனப்புரவி தொடர் பயணம்
பொதிகைத் தமிழை மழலைகளில் வளர்த்து
மதியின் பிரகாசமாய் வானலைகளில் ஊர்வலம்

வெள்ளை ரோஜாவின் மென்னிதழ் அடுக்குகளாய்
கொள்ளை கொண்ட இலண்டன் ரைம் முத்தே
அள்ளியுண்டவர், தந்த முத்தத்தில் சிவந்து போனாயே
புள்ளி மயிலாக நீ தாவிய இடமெங்கும் - உனக்கு பூத்தூவல்

சிப்பி வயிற்று முத்தாக முதிர்ந்து விளைந்த இலண்டன் ரைம்
வளமும் வலிமையும் - நிறைந்த புகழும் - பெறவே
கூடிய சனபதினில் நீ அமர, வானக மாலைகள் மோகனை
மூடியே நிறைந்து மங்கள வாழ்த்துக் கூறட்டும்
புனித கங்கை நதியாக உன்கலைப் பயணம் பொங்கி
புகழ் பூத்து, எங்கும் பெருகிப் பூரிக்க, வாழ்த்துகிறேன்

● தேவராணி - சிவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி:
**416 494 7440**
தொலைநகல்:
**416 497 9507**
மின்னஞ்சல்:
contact@alaiyosai.com

# மூன்றாவ



எங்கள் கலைகள்
எங்கள் நிகழ்வுகள்
எங்கள் உணர்வுகள்
மண்ணிலிருந்து விண்ணுக்கு...

1430 AM ALAIYOSAI
அலையோசை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாண்டு காற்பதிப்பில்

நள்ளிரவு 12 மணி முதல் காலை 6 மணி வரை
**1430 AM** அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது!

# அலையோசை

www.alaiyosai.com வானொலிச் சேவை

அறிவித்தல்களுக்கு 50% கழிவு!
விளம்பரங்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்!!

# 'லண்டன் ரைம்'

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை
கனடாவில் அதிகாலை 1:30 முதல் 2:30 வரை
TRT தமிழ்அலை வழியாக...
லண்டனில் காலை 6:30 முதல் 7:30 வரை
ஏனைய ஐரோப்பிய நாடுகளில் 7:30 முதல் 8:30 வரை நீங்கள் கேட்கலாம்.

London First Audio
Tel: (44) 208 586 9636





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் வாழ்த்துகள்!

இலண்டன் ரைம்மே உன்
நாலாவது பிறந்தநாள் வாழ்த்து

தமிழுக்கு அமுதென்று பெயர் அந்தத்
தமிழ் தந்த வானொலியாம் நீ என்போம்
ஒரு வயதில் நீ தவழ்ந்து மெதுவாக நீ நடைபயின்று
நேயர்கள் சிலரைக் கண்டாய்
இரண்டாம் வயதை நீயடைய இரட்டிப்பு
மகிழ்ச்சியில் தத்தித் தத்தித் தளர்நடை போட்டாய்
வான் பரப்பில் உன் குரல் மறைந்திடவே
கலங்கி நின்ற உன் உறவுகள் மத்தியில்
உறுதியுடன் நீ நின்று வெற்றி கண்டாய்

மூன்றாம் வயதினில் முப்பெரும் கலைஞர்களுடன்
பல்சுவை நிகழ்ச்சியுடன் தித்திக்க வைத்தாய்
நூற்றுக் கணக்கான குழந்தைகள் படை சூழ
அன்புக் கயிற்றால் பிணைக்கப்பட்டாய்
தமிழ் மறந்த புலம் பெயர் நாட்டில்
தமிழ் மொழியை வளர்த்து விட்ட
உன் வளர்ச்சி யேற்றத்தக்கது.
கவிஞர்கள் பலரைத் தட்டிக் கொடுத்து அவர்
பெயர் விளங்க வைத்தாய், முகம் தெரியாக்
கலை உள்ளங்கள் கூட்டுக் குடும்பமாய்
பின்னிப் பிணைய வைத்தாய்.

தன்னலம் கருதாது உழைத்து வரும்
கலையக உறவுகளும் பூமாலை நாம் கொடுக்க
பாமாலை பாடிவரும் இலண்டன் ரைம்மே'
நீ என்னாளும் புதுப் பொலிவு பெற்று
புத்தம் புது ஆக்கங்களுடன் புத்தம் புது நேயர்களையும்
அரவணைக்கும் உன் புகழ் ஓங்க என்
நல்வாழ்த்துக்களும் ஆசிகளும்
என்றும் உண்டு

• திருமதி இந்திரா செல்வநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க!

தேம்ஸ் நதியோரம் தெவிட்டாமல் ஒலிக்கும்
வான்புகழ் வண்ணத் தமிழைக் காவி வரும்
இலண்டன் ரைம்மிற்கு இனிய வணக்கம்
முக்கலையகங்களுமே முத்தான தமிழை
கொத்தாக வழங்கும் உந்தனுக்கு
இனிய நல் பாராட்டுகள்
அன்னைத் தமிழை அகிலமெங்கும் பரப்பி,
நாலுவருடச் சேவையை நற்றாய் நிறைவு செய்து
ஆண்டு ஐந்தை அமைதியாக அடைந்திட்டாய்
புலம்பெயர் நாட்டினிலே, ஐந்தாவது அகவையில்
அடிஎடுத்து வைத்து, அகில உலகமும்
உன் சேவை உயர்ந்து, வளர்ந்து
பலசாதனைகள் படைத்து, மிளிர
வேண்டுமென வேண்டுகிறோம்.
உன் இனிய நல்ஒளிபரப்பை வளர்க்கும்
அனைத்து உள்ளங்களையும் பாராட்டி,
ரஜனி, அஞ்சு, நிதா, குமரன், தீருன், தாஸ்,
மனோஜா, நிலா, சுகர்ணன், துஷ்யந்தன் அறிவிப்பாளர்கள்
அனைவருக்கும் நன்றி தெரிவித்து
இலண்டன் ரைம்மை திறம்பட நடத்தும்
இயக்குனர் நடா மோகனின்
திறமையையும் பாராட்டி, இலண்டன் ரைம்
பல்லாண்டு காலம் பார் போற்றும்
நல் ஒளிபரப்பாக வளர
எல்லாம் வல்ல இறையருள் கொண்டு
இதயபூர்வமாக வாழ்த்துகிறோம்.

அன்புடன்
- நகுலா சிவநாதன், ஷறீகா, ஷறீகன் - ஜேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார்

ஆறுமுகநாவலருக்குப் பின் அவர் விட்டுச்சென்ற சைவப் பணியை தொடர்ந்து வளர்த்தவர் சிவபாதசுந்தரனார். அவர் பருத்தித்துறையில் உள்ள புலோலியைச் சோந்த சுப்பிரமணியபிள்ளை என்பவருக்கும் வள்ளியம்மைக்கும் இளைய புதல்வராக 1878ம் ஆண்டு பிறந்தார். அவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழக பீ.ஏ. பட்டதாரியான அவர் பரமேஸ்வராக் கல்லூரியிலே ஆசிரியராகவும், பின்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உப அதிபராகவும், அதிபராகவம், கடமையாற்றினார். அக்காலத்திலேயே தான் அவர் சைவப்பணியில் மிகுந்த ஈடுபாடு காட்டினார்.

அவர் குரு-சீட முறையிலும் தனது கற்பித்தலை மேற்கொண்டார். மதமாற்றத்தைத் தீவிரமாகக் கண்டித்தார். சைவர் தமது பண்பாட்டைப் பின்பற்றப் பல வழிகளிற் பணியாற்றினார். அவர் நூல்களை பல எழுதினார். இலங்கையின் இந்து போட் எனப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து (1928-1930) பல பணிகளை ஆற்றினார். கல்வி ஆலோசனை சபை, கன்னங்காராவின் சபை, விசாரணைச் சபை என்பவற்றிலும் அவர் அங்கத்தவராக விளங்கினார்.

பெரியார் சிறந்த சீர் திதுஷதவாதியாகவும் விளங்கினார். ஆலயங்களிலே நடைபெறுகிற மிருக பலியிடுதலை எதிர்த்தார். சுழிபுரம் வழகம்பரை அம்மன் கோயில் முதலான சைவாலயங்களில் நடைபெற்ற மிருக பலியிடுதலை தடுத்தமை இதற்கு தக்க சான்று.

1948 முதல் 1953 வரையுள்ள காலப்பகுதியில் பெரியார் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவராக இருந்து தம்மாலான பணிகளை ஆற்றினார். ஆலயத்தை புனருத்தாரணஞ் செய்து 1952ஆம் ஆண்டு கும்பாபிடேகம் செய்வித்தார். பிற இடங்களிலிருந்து இவ்வாலயத்தைத் தரிசிக்க வரும் அடியவர்கள் தங்குவதற்கென திருஞானசம்பந்தர் மடத்தையும் கட்டுவித்தார். நடராஜர் முதலான விக்கிரகங்களையும் அன்பளிப்புச் செய்தார்.

சைவப் பெரியாரின் சைவப் புலமைக்கும் வாழ்வுக்கும் பணிக்கும் அவரெழுதி வெளியிட்ட நூல்களே சான்றாகும். சைவமாணவர்களுக்கென சைவபோதம் முதற்புத்தகம். சைவபோதம் இரண்டாம் புத்தகம் திருவருட்பயன் என்பனவற்றை எழுதினார். பெரியாருடைய நூல்கள் இலங்கையில் மட்டுமின்றி இந்தியா போன்ற பிற நாட்டு மக்களாலும் உவந்தேற்றப்பட்டு வருகின்றமை அவரின் புலமையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

இவ்வாறு சைவத் தமிழ்ப் பண்பாடு பரவப் பலவகையிலும் தமது வாழ்வை அர்ப்பணித்த பெரியார் 1953ஆம் ஆண்டில் இறையடி சேர்ந்தார். அவரின் நினைவு தினவிழா அவர் பணியாற்றிய விக்ரோறியாக்கல்லூரியில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

- திருமதி சேதுபதி - செல்ம், ஜெர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலல்ல கண்ணியம்

இளமையது இலக்கியமாய் இழைத்திருக்க
அழகி அதை அணிகலனாய் அணிந்திருக்க
தென்றலாகத் தெரிந்தவள் மின்னலாக மறைந்ததேனோ!
எண்ணியவன் இளவரசன்!
அவன் மனமெல்லாம் நிறைந்திருந்தாள் அம் மின்னல்!
வண்ண வண்ண கனவுகளாம்! வகை வகையாய் வருகிறதே!
இளைஞன் மனமல்லவோ! இருப்புக் கொள்ளுதில்லை!
பார்க்கின்ற இடமெங்கும் பாவை அவள் பிம்பம்!
படுத்துறங்கும் போதினிலும் பல்லவியாய் இசைக்கின்றாள்!
கனவா நனவா என்று தடுமாறும் இளநெஞ்சம்!
நறுவம் உண்ட கவியினைப்போல் அங்கும் இங்கும் தாவி நிற்கும்!

அவள் ஏனோ என் கண்முன்னே இன்றென்று வந்தால்!
யார் அந்த அழகரசி? எந்நாட்டு இளவரசி?
ஏன் தனியே வனம் புகுந்தாள்? இம்மட்டு துணிவா அவளுக்கு?
தூசு அசைத்து, வாழைக்கால் நகர்த்தி, மூங்கில் கை அசைத்து
வளைந்து சென்றுவிட்டாள் அந்த வடிவான வானவில்!
ஆனால் மின்னலாய் மறைந்து விட்டாளே!
ஏங்கிற்று இளைய உள்ளம்! துடிதுடிப்பு பறந்து விட
ஏக்கம் மட்டுடம் மனம் நிறைந்திருக்க
மீள அவளை காணவென்று மீண்டும் அவன் காத்திருந்தான்!
சிறியதோர் நப்பாசை இவனிடமும் இருந்ததினால்
நேற்றைபோலவே இன்றும் காத்திருக்கின்றான்!
ம் அவன் காத்திருந்தது போலவே வந்தாள் அவள்,
ஆனால்... அவள் நேற்றைய புதுமையல்ல!
வீரம் நிறைந்த முகமதி உடையாள்!
மெல்லிடை அசைக்கவில்லை, நாண நடை பயிலவில்லை!
வீர நடை நடந்து,
பெண்ணே நீ எழுந்து நில் விழுந்து விடாதே என்று
வீரம் என்ற சொல்லுக்கும் அவள் இலக்கணம் எழுதி நின்றாள்!
வீரமகள் அவள் பார்வை பார்த்ததும்
தோன்றுவது காதல் அல்ல! கண்ணியமே!
எண்ணினான் இளவரசன் காதல் பறந்து கண்ணியமாயிற்று!

ஆக்கம்

- அஞ்சுகுமார் - லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் பொம்மைகள்

**அனுபவ குறிப்பு**

'உரும்பையூர்'
**தேவராணி சிவராஜா**
வன்கூவர்

'லண்டன் ஸைரம்'

பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்துணவுகளை மட்டும் கொடுத்து ஆரோக்கியமாக வளர்த்து விட முடியாது. நோய்கள் வருவதற்கு ஏதுவான காரணிகளை ஆராய்ந்து முன் எச்சரிக்கையுடன் பாதுகாத்தல் மிக முக்கியம். பெற்றோராகிய எமக்குச் சில அடிப்படை அறிவுகள் வேண்டும். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆரோக்கிய வாழ்விற்கான பல விடயங்களைக் கூறுகின்றன. இப்படியான நிகழ்ச்சிகளை பார்த்துக் கேட்டு, வாசித்து அதிலுள்ள அறிவுரைகளின்படி ஒழுகி ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். எனக்கு தெரிந்த ஒரு விடயம் பற்றி உங்களுடன் கலந்து கொள்ள விரும்புகிறேன்.

குழந்தைகளுக்கு பொம்மை வாங்கிக் கொடுக்கும் முன் சில விடயங்களை மனதில் கொள்வோமே, பிள்ளைகளின் அறிவுத் திறன், மன எழுச்சி, உடல் வலிமை என்ற மூன்று நிலைகளைவைத்தே, பெற்றோர் பொம்மைகளைத் தேர்ந்து எடுக்க வேண்டும். அப்போது கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் பொம்மைகளால் குழந்தைகட்கு எந்தவிதமான ஆபத்துக்களும் வராது என்பதை உறுதி செய்வதேயாகும்.

கூர்மையான மூலைகள் கொண்ட பொம்மைகள் ஆபத்தானவை கண், மூக்கு போன்ற இடங்களில் குத்தி விடும். மற்றது பல் முளைக்கும் கால கட்டத்தில் குழந்தைகளுக்கு Teething Ringsஐக் கடைகளில் வாங்கிக் கொடுப்பார்கள்.

இப்படியான பிளாஸ்ரிக் வளையங்களில், காரியம் அஸ்பெட்டாஸ்-அமோனியம் நைற்றேற் ஹைட்ரா ஒக்சைட (Hydro oxiod) லித்தியம் போன்ற ரசாயனப் பொருட்கள் தோய்க்கப்பட்டிருக்கம். இது தவிர பொலிவைனைல் குளோரைட் (P.V.C) என்ற ரசாயனப் பொருட்களாலும், பொம்மைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் P.V.C. யின் கடினத் தன்மையைக் குறைக்கும் பொருட்டு (Phthalate) எனப்படும் ரசாயனம் சேர்க்கப்படுகிறது. இது விஷத் தன்மை வாய்ந்தது. நாக்கினால் தடவினாலோ, கடித்தாலோ கான்ஸர் (Cancer) குடல் நோய்கள், இரத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகை, வளர்ச்சியின்மை, சிறுநீரகப் பாதிப்பு என்பன ஏற்பட ஏதுவாகும். குழந்தைகளுக்குக் கொடுக்கும் பொம்மைகள் மெத் மெத்தென்று இருந்தால் தான், அவர்கள் விரும்புவார்கள். அதை வைத்து விளையாடினால் காயம் ஏற்படாது. என்று நாமும் வாங்கி விடுகிறோம். இது தவறு என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.



பிளாஸ்ரிக் பொம்மைகள் கூட மிகவும் ஆபத்தானவையே மருத் துவமனைகளில் வீசி எறிந்த Urinary Bags Disposable Syring, Toilet Sheets, குப்பைத் தொட்டி யில் இருந்து எடுத்த பிளாஸ்ரிக் கலன்கள் கழுவாமலே மெசினால் உருக்கி திரும்ப வடிவம் கொடுத்து பொம்மைகள் ஆக்கு கிறார்கள். இதனையும் மனதில் கொள்ளவேண்டும்.

அடுத்து 'பெயார்' போன்ற மென்மையான பொம்மைகளையும், குழந்தைகள் விரும்புகி றார்கள். இவற்றில் காணப்படும் செயற்கை ரோமங்கள், குழந்தைகள் கைவிடாமல் கட்டிப்பிடித்துக் கொண்டு தூங்கும் போது இவற்றில் படிந்த தூசிகள் வாய் மூக்கு வழியே போய் சுவாசப்பை நோய்களைக் கொண்டு வரும் (உதாரணம் - அஸ்மா) நிமோனியா.

# பொம்மைகள்
# பொம்மைகள்
# பொம்மைகள்
# பொம்மைகள்

எனவே சிலிக்கான், ரப்பர், கூர்மையான மூலைகள் இல்லாத மரப்பாச்சி, எடை குறைவான பொம்மைகள் ஆபத்தில்லை. இது பற்றி விழிப்புணர்வு கொண்டடவர்களாக நாமும் செயற்பட்டு எதிர்காலச் சந்ததியை ஆரோக்கிய மாக வைத்திருக்க முயல்வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி 1

இருண்ட குகைக்குள்ளிருந்து ஒளி மெல்ல மெல்லப் படர்ந்து பரவி முன்னேறி தண்டவாளங்களை நனைக்கிறது. அடுத்த நொடியில் ஒளிப் பிரவாகமும் பேரிரைச்சலுமாக பாய்ந்து வந்து நின்றது புகையிரதம்.

தோள்பையைச் சரிசெய்துகொண்டு புகையிரதத்தில் ஏற ஆயத்தமானேன். புகையிரதம் பலரை உதிர்த்துவிட்டு என்னையும் வேறு சிலரையும் விழுங்கிக் கொண்டு மறுபடி வேகமெடுத்தது. மனிதர்களைப் போல முணுமுணுக்காமல், களைப்பில்லாமல் பயணத்தைத் தொடர்ந்தது.

நான் ஏறியிருந்த பெட்டியில் அத்தனை கூட்டமில்லை. வழக்கம்போல அந்த முகங்களை அவர்களறியாதவாறு வாசித்தேன். எத்தனை விதமான முகங்கள்... நின்றபடியே உறங்கி வழிந்து கொண்டும், புத்தகங்களையும் மனிதர்களையும் வாசித்துக் கொண்டும், உரத்து விவாதித்துக்கொண்டும்... வெள்ளையாய், மஞ்சளாய், கறுப்பாய், உயரமாய், குள்ளமாய், மீசையோடும், மழித்த நீலநரம்புகள் தெரியும் கன்னங்களுமாய்... எத்தனை விதமாய்... மனிதர்கள்! மனிதர்கள்! தோற்றத்தில் மட்டுமல்லாது குணங்களாலும் வேறுபட்ட மனிதர்கள்.

"சொல்லட்டுமா?" என்றது மானசி.

என்ன இது தனியாய்தானே புகையிரதத்தில் தொற்றிக்கொண்டாள்..... யாரது மானசி என்று நீங்கள் புருவம் உயர்த்துவது எனக்குத் தெரிகிறது. மானசியை உங்களுக்கு அறிமுகப்படுத்தாது போனால் அந்தப் பாவத்தை நான் எந்த கங்கையில் மூழ்கித் தொலைப்பது? (கங்கையில் மூழ்கினால் பாவம் தொலையுமா என்பது குறித்து இப்போது விசாரம் கொள்ள வேண்டாம். கதையைக் கவனியுங்கள்)

மானசி என்பது என்னுடைய மனசிற்குள்ளிருந்து ஓயாமல் என்னைத் தொந்தரவு செய்யும் குரலின் பெயர். (வடமொழிப் பெயர் போல இருக்கிறதே என்று முகம் சுளிக்கிற பெரியவர்கள் மன்னிக்கவும்) இப்போதெல்லாம் அதனுடைய தொந்தரவு அதிகமாகிவிட்டது. சளசளவென்று பேசிக்கொண்டே இருக்கிறது. முணுமுணுக்கும்போது அதுவாகவும் சமாதானம் சொல்கிறபோது இதுவாகவும் எதிரெதிரே உட்கார்ந்து இரண்டு குரலில் பேசுகிறது. பேசாதிரு என அதட்டினால் சொற்ப நேரம் மௌனமாகி மறுபடியும் சளசளக்க ஆரம்பித்துவிடுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் கவிதை போல எதுவோ ஒன்றை முயன்றுபார்க்கிறது. அழுகையோ ஆனந்தமோ உரைநடையோடு கோபித்துக் கொண்டுபோய் கவிதையைக் கட்டிக்கொள்கிறது. மானசி சொல்வதைக் கவிதை என்று ஏற்றுக்கொள்வதும் விடுவதும் உங்கள் பொறுப்பு. நான் ஒன்றும் காக்கைக்குஞ்சு பொன்குஞ்சு என்று வரிந்துகட்டிக் கொண்டு வரப்போவதில்லை. மானசிபால் எனக்கு நிறையவே இரக்கம் உண்டு. ஏனென்று நீங்களே பின்பு உணர்ந்து கொள்வீர்கள்.

அது, அந்த மானசி புகையிரதத்தில் ஏறியதுமே என்னை நச்சரிக்கத் தொடங்கி விட்டது. என்னவென்று கேட்கலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகங்கள் மழையாகும்...

தொடர்கதை



"என்ன சாமி இவன்"
என்றொருவன் பரிகசித்தான்.
பூமியிலே வந்து விழுந்தபின்னால்
கோடிப் பிரிவினைகள்
கொள்வான் மனிதன் எனத் தெரியாதா?
பின்னும் ஏன்
தோற்றத்தில்
தோல் நிறத்தில்
உயரத்தில்
மாறுபட்ட படைப்புகளாய்
மண்ணுக்கு அனுப்புகிறான்?

கலைவாணி இராஜகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டீர்களா...? இதை நான் என்ன செய்வதாம்? கடந்தவாரம் ஹைகூ போல ஒன்றையும் முயன்றுபார்த்தது. என்ன செய்வது? என்னுடைய தலையெழுத்து அதைக் கேட்பது உங்களுடைய கேடு காலம் அதை வாசிப்பது. எதற்கெல்லாம் இரங்குவதென்று இல்லையா என இதை வாசித்தபின் நீங்கள் நினைக்கக்கூடும்.

பனிக்கால மரங்களுக்குள்
சிறைப்பட்ட கனவுகள்...
பாவம் அந்தத்தளிர்கள்!

என்னுடைய சக குடித்தனக்காரி வானதிக்கு மானசிமேல் ஒரு பிடிப்பு. இல்லையென்றால் தினம் வேலைக்குப் போய் வந்து ஒரு புத்தகத்தோடு உட்கார்ந்துவிடுகிற, அடிக்கடி வானத்திற்குள் விழிகளைத் தொலைத்துவிடுகிற, அதிகம் பேசாத, இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ளாத, நிறைய சுயகௌரவம் பார்க்கிற ஒருத்தியோடு ஒரே அறைக்குள் வாழ்ந்துகொண்டு முரண்படாதிருப்பது சிரமம்.




புகையிரதம் யாரோ இழுத்துப்பிடித்தாற்போல தடக்கென்று நின்று, உதிர்த்து விழுங்கிப் புறப்பட்டது.

"பால் முடிஞ்சுது... வரேக்கை மறந்திடாம வாங்கிக்கொண்டு வா" வானதியின் குரல் நினைவூட்டியது.

அத்தோடுகூட சலவைத்தூளும் வாங்க வேண்டும். சனி - ஞாயிற்றுக்கிழமைகள் துவைப்பதிலும், துப்பரவாக்குவதிலும் கழிந்துபோய்விடும். சிலசமயம் வானதியும் நானும் சினிமாவிற்குப் போவோம். வானதி சினிமாவோடு ஒன்றிப்போய் உட்கார்ந்திருப்பாள். அதில் வரும் கதாநாயகியாகத் தன்னைப் கற்பித்துக்கொண்டு காதல் சோகத்தில் கரைவாள். அவளுக்கும் ஒரு இறந்தகாலமும் அவள் இறந்த காலமும் இருந்தன. காதல் குறித்தும் திருமணம் குறித்தும் நிறைய கற்பனைகளை வளர்த்து வைத்துக்கொண்டு அவஸ்தைப் பட்டுத் தெளிந்தவள். ஆனால்...

**காதல் என்பது புனிதமானது என்று கொண்டாடுவதற்கொன்றும் குறைவில்லை.**

கவிஞர் வைரமுத்துவின் வரிகளில் சொல்வதானால்:

**பூமியின் சுழலுக்கு - எண்ணெய்**
**போட்டு விடுவதெல்லாம்**
**சாமியால் ஆவதில்லை - காதல்**
**சக்தியால் ஆவதுண்டு.**

என்பதே அவள் காதல் பற்றி வரித்துக்கொண்ட கருத்து. என்னை அந்த வரிகள் ஒன்றும் கரைத்து விடவில்லை. காதல் இல்லையென்றால் பூமி சுழலாதாமே...? சிரிப்புப் பொங்கிவரும். சும்மாவே கேலி பேசும் மானசி வாயை மூடிக்கொண்டிருக்குமோ? கெக்கலி கொட்டியபடி தொடங்கி விடும்.

**காதல் என்பது...**
**சொற்ப நேரம்**
**வாழ்க்கை வானத்தில்**
**வந்துபோகும் வானவில்!**
**விழித்தவுடன் மறந்துபோகும் கனவு!**
**காதல் என்பது...**
**திருமணத்தின் பின்னான**
**பொய்களுக் கெல்லாம்**
**முகவுரை!**

ஏன் மானசி இப்படிச் சலித்துக் கொள்கிறதென்று அறிவதற்கு நீங்கள் கொஞ்சம் காத்திருக்கவேண்டும்.

(வளரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரோஜாவின்

# பாலர் பூங்கா

அன்புத் தம்பி தங்கைகளே!
ஒவ்வொரு மாதமும் ரோஜாவின் பாலர் பூங்காவில் உங்களோடு ஒன்றாக உலாவர விரும்புகிறேன். பாலர் பூங்காவின் கதவுகள் எப்பொழுதும் உங்களுக்காக திறந்திருக்கும். எங்கள் மொழி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் சிறுவர், சிறுமிகளான உங்களையே சாரும், ஏனெனில் இவற்றின் எதிர்காலம் உங்கள் கையிலேயெ தங்கி இருக்கின்றது. எங்கள் மொழி அழிந்தால் எங்கள் இனமும் அழிந்துவிடும். எந்த மொழியையும் இனத்தையும் அழிந்து போகாமல் காப்பதற்காக லட்சியக் கனவுகளோடு புலம் பெயர்ந்தோமோ அந்த லட்சியத்தைக் நாங்கள் மறந்துவிடக் கூடாது. நீங்கள் மனது வைத்தால் எங்கள் மொழியும் இனமும் என்றென்றும் வாழும்! இதோ! உங்களுக்காக வர்ணம் தீட்டும் போட்டி ஆரம்பமாகிறது. உங்கள் ஆர்வத்தையும், திறமையையும் உலகறியச் செய்யுங்கள்! மீண்டும் அடுத்த பூங்காவில் சந்திக்கும்வரை-

'அன்புடன்
மாலினி அக்கா'

## வர்ணம் தீட்டும் போட்டி: 1



(12 வயதிற்குட்பட்டவர்களுக்கு மட்டும்)

மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி ரோஜாவின் முகவரிக்கு அனுப்புங்கள். சிறப்பாக வர்ணம் தீட்டிய ஒருவருக்கு பரிசு காத்திருக்கின்றது. மேலும் இருவருக்குப் பாராட்டுக்கள் காத்திருக்கின்றன.

பெயர், பிறந்த திகதி, பாடசாலை, தொலைபேச இலக்கம், விலாசம் என்பவற்றையும் எழுத மறவாதீர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்கே உலகு.
அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை. ஆதிபகவன் உலகில் வாழும் உயிர்களுக்கு முதன்மை.

2. கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.
தன்னை விட அறிவில் மூத்த பெருதகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்ன தான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை!

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.
மலர் போன்ற மனதில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்.



## பசுவும் கன்றுக்குட்டியும்

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு- அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு- உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி

நாவால் நக்குது வெள்ளைப்பசு-பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு-மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி.

-கவிமணி தேசிய விநாயகம்

ரோஜாவின்

# பாலர் பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட்டைப் படம்

# லண்டனில் போன் மாலைப்பொழுது கனடாவில் அலை மாலைப்பொழுது

கனடாவிற்கும்-லண்டனிற்கும் வானலைப் பாலம் அமைத்து வசீகரித்துக் கொண்டிருக்கும் இவ் வேளைதனில், வானலையில் மட்டுமன்றி இப்போது வான்பரப்பிலும் கூட நேசக்கரம் கொண்டு தமிழ் தாங்கி உங்கள் நெஞ்சமெலாம் நிறைத்து நிற்பவர்களாய் லண்டன் First Audio கலையகமும் கனடா அலையோசைக் கலையகமும் இருக்கின்றார்கள் என்பதில் சற்றும் ஐயம் இல்லை.



புலர்ந்த பொழுதுதனில் 'லண்டன் ரைம்' படைத்து உங்களோடு இணைகின்ற லண்டன் First Audio கலையகத்திற்கும் புலரும் வேளையில் உழைப்போர்க்கு உதவியாய், களைத்தோர்க்கு இதமாய் கலைச்சேவை செய்யும் அலையோசைக்கும் வேற்றுமைகள் என்பதே இல்லை என்று கூறிவிடலாம்.





காரணம், அன்புத்தமிழ் உறவுகளின் நிறைந்த ஆக்கங்களினாலும் ஊக்கங்களினாலும் மலர்ந்து சிறக்கின்ற லண்டன் First Audio கலையகம் போன்றே நேயநெஞ்சங்களின் அன்பினாலும் ஆதரவினாலும் கட்டுண்டு கனடிய வான்பரப்பில் அலையோசைக் கலையகமும் இணைகின்றது. இலைமறைகாயாக இருக்கின்ற எத்தனையோ அற்புதமான கலைஞர்களை வெளிக்கொணர்வதற்கு இவ்விரு கலையகங்களும் என்றும் பின்னிற்பதில்லை.







1430AM அலைவரிசையூடாக டிசம்பர் 2000 முதல் தமிழ் ஒலிபரப்பை முழுமையாக கேட்டு மகிழ்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. இந்நிகழ்வினை உள்வாங்கிக் கொண்டிருக்கும் வேளைதனில் செய்தி அரங்கம் ஊடாய் எம்மை நிறைத்த, எமது இன்றைய நிலைய அதிபர் விஜய் ஆனந்த் அவர்களின் அரிய முயற்சியின் பிற்பாடாய் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வான்பரப்பில் 1430AM அலைவரிசை வசீகரிப்பாய் 'அலையோசை' வானொலி உதித்தது. அன்றிலிருந்து பல இடர்பாடுகளை தாண்டி காலவோட்டத்தில் பல புதிய உறவுகளை இணைத்து மூன்றாவதாண்டை எட்டிப் பிடித்த, வெற்றிச் சுவடோடு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதூகலம்







இன்னும் பல எதிர்பார்ப்புகளை தாங்கியபடி மெல்ல நகர்கின்றது.

அலையோசையின் சுவடுகள் இவ்வாறிருக்க, லண்டன் First Audio கலையகத்தின் பல இடர்பாடுகளுடன் கூடிய இறந்தகாலங்களும் கூட இன்று இணைந்து இருக்கின்ற ஈடு இணையற்ற பல அன்புத்தமிழ் உறவுகளின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர் பங்களிப்பில் மலர்ந்து சிரிக்கின்றது. 1998ம் ஆண்டு ஆனி மாதம் 10ஆம் திகதி லண்டன் First Audio கலையகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 'லண்டன் ரைம்' நிகழ்ச்சி கூட 2002 ஜூன் மாதம் 10ம் திகதி தனது 4 வயதை பூர்த்தி செய்து 5ம் வயதில் காலடி பதித்து வெற்றிக்களிப்பினை சென்ற ஆண்டு பகிர்ந்திருந்தது.

நேய நெஞ்சங்களின் ஆக்க ஊக்கங்களினால் நிறைந்து தொடர்ந்து வெற்றிப்பாதைகளை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இவ்விரு கலையகங்களும் சில பல வர்த்தகப் பெருமக்களினதும் வள்ளல்களினதும் வழங்குதலில் வானலை வசீகரிப்போடு நின்றுவிடாமல் நேயர்களோடு நேயர்களாய் நண்பர்களோடு நண்பர்களாய் வான்பரப்பையும் வசீகரிக்க வேண்டும் என்ற நோக்கோடு லண்டனில் 'பொன் மாலைப் பொழுது'ம் கனடாவில் 'அலை மாலைப் பொழுது'ம் நிகழ்த்தி நேயர்களோடு சங்கமித்து நெஞ்சமெலாம் இந் நிகழ்வினை தங்க வைத்துள்ளனர் என்பதில் ஐயமில்லை. இந்நிகழ்வில் காற்றோடு கதை பேசிய கலைஞர்களும் காதோடு கதை கேட்ட அன்புத் தமிழ் உறவுகளும் ஒற்றுமையாய் ஓர் அரங்கில் ஒன்று கூடிக்குலவி மகிழ்ந்திருப்பர். தனது நாற்பத்தினான்கு சுவடுகளை அற்புதமாய் தாண்டிவிட்ட 'பொன் மாலைப் பொழுது'ம் தனது முதல் சுவட்டை செவ்வனே பதித்து விட்ட 'அலை மாலைப்பொழுது'ம் மீண்டும் எப்போ நிகழும் என்கின்ற நிறைந்த எதிர்பார்ப்புக்களோடு அன்பு நெஞ்சங்கள் காத்திருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் அன்பும் ஆதரவும் ஆக்க ஊக்கங்களும் இருக்கின்றவரை நாற்பது நிகழ்வுகள் அல்ல பலநூறு நிகழ்வுகளோடு இவ்விரு கலையகங்களும் வரலாறு படைக்கும்.

**சிவபுரத்தூர் கஜன்**
எட்டோபிக்கோ, கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா

# எஸ்.கே. ரி நகைமாளிகை ஆதரவில் தங்கச் சங்கிலி பரிசு பெறும்

ரோஜாவின்

# சிறுகதைப் போட்டி

முடிவுத் திகதி: **மார்ச் 15, 2003**

பொது நிபந்தனைகள்:

- அகில உலக ரீதியில் தமிழ் பேசும் எழுத்தாளர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
- போட்டிகளுக்கு அனுப்பும் சிறுகதையின் உருவம், பொருள், அளவு ஆகியவை தொடர்பாக எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. படைப்பாளிகள் தாங்கள் விரும்பிய தலைப்புகளில் ஆக்கங்களை அனுப்பலாம். தமிழ் மக்களின் புலம்பெயர்வு, விடுதலைப் போராட்டம் ஆகியவை தொடர்பான சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

போட்டி முடிவு திகதி

- மார்ச் 31, 2003.
  இத் திகதிக்குப் பின்னர் வந்து சேரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.
- சிறுகதைகள் தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதியோ அன்றி தட்டச்சு செய்யப்பட்டோ அனுப்பலாம். 6 - 8 பக்கங்களாக இருக்க வேண்டும் .
- போட்டியாளர்கள் தங்கள் படைப்புகளோடு தங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கத்தையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
- போட்டிக்கு அனுப்பிய சிறுகதைகள் தங்கள் சொந்தப் படைப்பு என்பதையும் இதுவரை வேறு எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமாகவில்லை என்பதையும் வேறு பத்திரிகைகளுக்கு பிரசுரிக்க அனுப்பிவைக்கப் படவில்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
- போட்டிக்கு வந்த கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது. எனவே பிரதி வைத்துக்கொண்டு அனுப்பவும்.

முதற் பரிசு:

## தங்கச் சங்கிலி

2ம் 3ம் பரிசுகள்:

## பெறுமதியான பரிசுகள்

ஐந்து ஆறுதல் பரிசுகள்:

## பரிசுக் கூப்பன்கள்


அனுப்பவேண்டிய முகவரி:
'Rojah'
1711 McCowan Road
P.O. Box 41575, Scarborough,
ON. M1S 2Y0 Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை ஒரு தூக்குக் கயிறு

*கணபதி ரவீந்திரன்*



இராமையா அந்த பொலிஸ் நிலையத்திற்குள் நுழைந்த போது ஆங்காங்கே நின்றிருந்த பொது மக்கள் மட்டுமல்ல சில பொலிசாரும் பீதியடைந்தனர். இடது கையில் வெட்டப்பட்ட ஒரு தலையும் வலது கையில் கவ்வாத்துக் கத்தியுமாக வந்து வாங்கில் அமர்ந்த இராமையாவைக் கண்ட ரிசேவ் பொலிஸ்காரர் திடுக்கிட்டுத் தடுமாறினாலும் தன்னை சமாளித்துக் கொண்டார். மறுகணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குத் தகவல் பறந்தது. பொலிஸ்காரர்கள் பரபரப்பானார்கள். சில பொலிஸ்காரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R&S Auto Sales

## Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!


28 ஆண்டுகள் அனுபவம்!

நியாயமான விலையில்
உத்தரவாதத்துடன்
உங்களுக்கு
தேவையான
கார்கள்
வான்கள்
வாங்குவதற்கு
ஆர் & எஸ்
உங்கள்
முதற் தெரிவு!



**RADHA**

**HONDA**
**TOYOTA**
**GM-MINI VANS**




**4362 Sheppard Ave. East**
**at Brimley**

# Tel: 416 412 3838




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமையாவைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். வெட்டப்பட்ட தலையிலிருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது. செய்தி காட்டுத் தீ போல பரவ பொதுமக்களும், பொதுஜன ஊடகக் காரர்களும் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். செய்தி கிடைத்ததும் மாவட்ட நீதிபதி, மரண விசாரணை அதிகாரி, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முதலிய அதிகாரிகள் ஸ்தலத்துக்கு விரைந்து வந்தனர். நீதிபதியின் உத்தரவின் பேரில் இராமையாவின் கையிலிருந்த தலை வாங்கப்பட்டு பொலித்தின் பையில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டது. இராமையாவை நெருங்கிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தன் கையில் இருந்த குறுந்தடியால் நாடியை பிடித்து உயர்த்தியபடி என்ன நடந்தது என்று கேட்டார். கலங்கிய கண்களோடும் நடுங்கும் உடலோடும் "நான் ஒரு கொலை பண்ணிட்டேங்க" என்று சொல்லிவிட்டு குலுங்கிக் குலுங்கி அழுதான் இராமையா. "சறி சறி அழ வேண்டாங் உண்ட பேரென்ன" என்று வினவினார் பொறுப்பதிகாரி. "இராமையாங்க ஐயா" "ஊர் எங்க" மீண்டும் பொறுப்பதிகாரி, "கண்டீங்கையா" 'சறி ஒண்டுக்கும் பயப்பட வேண்டாங் என்ன நடந்தது சொல்லு" தன் ஒலிப்பதிவு நாடாவை ஓட விட்டார் பொறுப்பதிகாரி. நீண்ட பெருமூச்சு ஒன்றோடு தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான் இராமையா.


"கண்டி நோனா தோட்டத்தைச் சேர்ந்தவன் ஐயா நான். தோட்டத்தில் கவ்வாத்து வெட்டிக்கிட்டு இருந்தவங்க நான். ஒருநா ராத்திரி எங்க தோட்டத்தை பொலிஸ்காரங்க சுத்தி வளைச்சாங்க, நம்ம வீட்டுக்கு வந்த பொலிஸ்காரங்க நான் புலிங்களுக்கு ஆதரவு தாறதாகவும், அவங்ககிட்ட ஆயுத பயிற்சி எடுத்திட்டதாகவும் சொல்லி, என்னை அரஸ் பண்ணி பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிகிட்டு போனாங்க, அங்கு கொண்டுபோய் ரொம்ப தாக்கினாங்க. அப்புறமா எங்கூட கைதான சில பொடியங்களையும் கூட்டிக்கிட்டு கொழும்பில 4ம் மாடில அடைச்சு வைச்சு ரொம்ப தும்புறுத்தினாங்க சாமி. அப்புறமா ஒரு மாசத்துக்கு மேலையா அங்கேயே அடைச்சு வைச்சிருந்தாங்க ஐயா. அப்ப தாங்க தொறய மொத மொதலா பாத்தேங்க" நிறுத்தி விட்டு மூச்சு வாங்கினான். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தொடர்ந்தான் இராமையா. "ஏதோ ஆட்கடத்தல் விவகாரத்தில அம்பிட்டு அவறை கூட்டிக்கிட்டு வந்தாங்க. அன்னைக்கிண்ணு அந்தக் காம்பிறாவில ஆளுங்க ஜாஸ்தி. தொறைக்கு தூங்கக் கூட இடமில்லாம ரொம்ப அவஸ்தைப்பட்டுகிட்டு இருந்தாருங்க" அவன் முடிக்கவில்லை பொறுப்பதிகாரி கேட்டார் "தொறை தொறை சொல்லுது, யாரு தொறை?" "அவர்தாங்க பால்ராஜ். நான் கொல பண்ணிக்கிட்டேனே அவர்தாங்க." சொல்லிவிட்டு மேசை மேலிருந்த தலையைப் பார்த்தான். இராமையா கொலை செய்திருப்பது அந்தப் பகுதி பிரபல வர்த்தகரும் பிரமுகருமான பால்ராஜ் என்பதை அறிந்ததும், மீண்டும் ஒரு பரபரப்பு அந்தப் பகுதி எங்கும் தொற்றிக் கொண்டது. "சறி சொல்லு" ஏதோ நினைவில் ஆழந்திருந்தவனை சுய நினைவிற்குக் கொண்டு வந்தது பொறுப்பதிகாரியின் குரல். கண்ணில் வடியும் கண்ணீரை துடைத்து விட்டு மீண்டும் தொடர்ந்தான் இராமையா.

"காம்பறா சுவத்தோட நிண்டுகிட்டிருந்த தொறைக்கு நா என்னோட இடத்தில அவர தூங்க விட்டேங்க. அண்ணையில இருந்து எங்கூட ரொம்ப அன்பாக பழகினாங்க. ரிலீசாவி போறப்ப என்னைய கூப்பிட்டு 'இராமையா நீ ரிலீசாவி போறப்ப என்னைய வந்து எங்க வூட்டில பாரு, ஏதாச்சும் உதவி பண்ணிறேன்' எண்ணு சொன்னாருங்க. அப்புறமா நானும் கொஞ்ச நாளுல றிலீசாகிற்றங்க, கையில காசு இருக்கலீங்க, தொற கொடுத்த வூட்டு விலாசத்தை வைச்சு கிட்டு, தொறைய பாத்துகிட்டு வரலாமிங்க என்று புறப்பட்டேன். தொற வூட்டை போனப்போ மணி ஏழாச்சு. வூட்டு முகப்பில நின்னு குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தேங்க, ஒரு பையன் வந்து விசாரிச்சான். விசயத்தைச் சொன்னேங்க. கொஞ்ச நேரத்துல தொறையே வெளியில வந்து என்னைய அழைச்சுகிட்டுப் போய் அவங்க சம்சாரத்துகிட்ட அறிமுகஞ் செஞ்சு வைச்சாங்க. என்னைய பற்றி விசாரிச்சதிற்கு அப்புறமா 'இராமையாவை சமையலுக்கு உதவியாக வைச்சிரு' என்னாங்க. அண்ணைக்கு அந்த வூட்டிற்குள்ள நொளைஞ்சவன் தான், மூணே மாசத்தில அந்த வூட்டில இருந்த அத்தனைய பேரிட அன்புக்கு பாத்திரமானேனுங்க" நிறுத்தி மூச்சு விட்டு மீண்டும் தொடர்ந்தான்.



"நான் போன ராசியோ என்னவோ தொறைக்கு புதுசு புதுசா பிஸ்னஸ் எல்லாம் வந்திச்சுங்க. ஒண்ணுக்கு மூணா லொஜ் எல்லாம் தொறந்தாரு. தொறைக்கு என்மேல ரொம்ப பிரியமுங்க. ஒரு லொஜ்ஜையே என் பொறுப்பில விட்டுட்டாறு. கொஞ்ச நாளில நான் அடியோட மாறிட்டேங்க. தொற எங்கிட்ட இம்புட்டு நேசமும் நம்பிக்கையும் வைச்சதில இன்னொரு காரணமும் இருக்குங்க. தொற பெண்ணு விசயத்துல கொஞ்சம் வீக்குங்க. லொஜ்ஜில தங்கிறதிற்கு எண்ணு வாற பொண்ணுங்களில அழகாய் இருக்கிற பெண்ணுங்களை எப்படியாவது மயிச வைச்சிருவாரு. அவுங்க சம்மதிச்சா என்னைய கூப்பிட்டு 'இராமையா இந்த புள்ளய நம்ம புது வூட்டுக்கு கூட்டிட்டு வா' என்பாரு. நா உடனேயே புரிஞ்சுக்குவன் சந்தோஷமா தலையாட்டிக்கிட்டு பொறப்படுவேங்க. காரணம் நா போயி வூட்டு கதவ தொறந்து விட புள்ளேங்க வந்த கொஞ்ச நேரத்துல தொற வந்திருவாரு. என் கையில நூறு ரூவா நோட்ட திணிச்சு 'இராமையா போயிட்டு ஆறுதலா வா என்பாரு' அதினிண்ட அர்த்தம் எனக்கு தாங்க புரியும். தன்னோட அந்தரங்கங்களெல்லாம் தெரிஞ்சு கிட்டவங்கிறதால என்கிட்ட ரொம்ப பிரியமாக இருந்தாருங்க. இப்படி ரொம்ப சந்தோஷமா இருந்து கிட்டப்போதான் ஆத்தாகிட்டயிருந்து கடதாசி வந்ததுங்க. என்னோட மாமன் பொண்ணு கறுப்பாயியை கட்டிக்கச் சொல்லி ஆத்தா கடதாசி போட்டிருந்திச்சு. பேருதான் கறுப்பாயியே தவிர சினிமா பெண்ணுங்க மாதிரி கறுப்பாயி ரொம்ப அழகா இருப்பாங்க" சொல்லும்போதே முகம் மலர்ந்தது அவனுக்கு. அந்த மலர்ச்சியோடு சொல்லத் தொடங்கினான்.

"பொறந்த நாளில இருந்து எனக்கிண்ணே வளர்ந்துகிட்டே வருதேங்க. 'மாமா மாமா' என்னு என்னைய சுத்திகிட்டேயிருக்கும் கட்டிகிட்டா உன்னையத் தான் கட்டிப்பேன் எண்ணு அடம்பிடிக்குமாங்க. அதோட படத்தையும் ஆத்தா அனுப்பியிருந்திச்சா, பார்த்ததுமே ரொம்ப சந்தோஷமாயிற்றுருச்சிங்க. படத்தில ரொம்ப அழகா சிரிச்சுகிட்டு இருந்திச்சுங்க. அதைப் பார்த்ததும் எனக்கு கையும் ஓடல காலும் ஓடலேங்க. கடதாசியையும் படத்தையும் எடுத்துகிட்டு தொறகிட்ட போனேனுங்க. தொற பார்த்துட்டு ரொம்ப சந்தோஷப் பட்டாங்க. 'அதோட இராமையா நீ ரொம்ப கொடுத்து வைச்சவன், பொண்ணு ரொம்ப அழகாயிருக்கின்னாங்க' அவரோட சம்சாரம் 'உன்னைய கட்டிக்க இந்த பொண்ணு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்படி சம்மதிச்சா? மகாராணியாட்டாம் இருக்காளே' என்று கேலி பண்ணினாங்க. அந்த அம்மா கலியாணத்திற்கு தாலியும் ஐயாயிரம் ரூபாவும் தாறதா வேற சொன்னாங்க. எனக்கு ரொம்ப சந்தோஷமாச்சு. கல்யாணத்துக்கு மூணு நாளைக்கு முன்னாலயே தொறை ஐயாயிரம் ரூவா காசு கொடுத்து என்னைய அனுப்பிச்சு வைச்சாரு. கல்யாணத்துக்கு மொத நாள் எல்லா ஏற்பாடும் பண்ணிற்று தொறங்களுக்காக பார்த்துகிட்டு இருந்தேனுங்க. மணி இரவு பத்தாகியும் தொற வூட்டில இருந்து யாரும் வரலேங்க. நம்ம உறவுக்காரங்க அத்தனை பேருமே என்னோட மல்லுக்கு வந்தாங்க. ஏ ஆத்தா 'போயும் போயும் பணக்கார வூட்டு பேச்சை நம்பினேயே அவனுங்க தங்க புத்திய காண்பிச்சுட்டாங்க பார்த்தியா' என தொண தொணத்தாங்க. விடிஞ்சா கலியாணம் தாலி கூட இல்லாம இருக்கறியே என வைதாங்க. விட்டில இருந்த அத்தனை பேருமே ஆளாளுக்கு வாய்க்கு வந்தபடி ஏசிட்டிருந்தாங்க. எனா... எம் மாமாதான் "சரி சரி காலையில கோயிலில மாலையை மாத்திக்குங்க....... அப்புறமா ஒரு பொது நாளுல தாலியை கட்டிக்கிலாம்னு சொன்னாரு. அவரு சொன்னதில ஞாயமிருக்கிண்ணுட்டு ஒரு வழியா எல்லாப் பயலுகளும் தூங்கிட்டாங்க. எனக்கு மட்டும் தூக்கமே வரலீங்க. தொற வாற வழியில ஏதாச்சும் அக்சிடன்ற் ஆயிற்றா.... கடவுளே அப்படி எதுவும் ஆயிட கூடாதுண்டு வேண்டிக் கிட்டேன். அப்பதாங்க வெளிய கார் ஒண்ணு வர்ற சத்தங் கேட்டுதுங்க.... நா எழுந்தடிச்சு வெளிய போறதுக்கும் தொற வீட்டுக் காரு வந்து நிக்கவும் சரியா இருந்திச்சுங்க. தொறைய பார்த்தோண அப்படியே அழுதிட்டேங்க. தொறை சொன்னாரு 'என்ன ராமையா பயந்திட்டியா? நாங்க றோட்டத் தவற விட்டிட்டம் அதுதான் சுத்திகிட்டு வர கொஞ்சம் லேற்றாயிற்று' எண்ணு சொல்லிக்கிட்டே கையில இருந்த பெரிய தட்டத்தில பழம், பாக்கு, பூ, புதுவேட்டி சட்டையோட தாலியையும் வைச்சு




## பூங்கோதை

இயக்குனர் பி.சி. ஸ்ரீராம் இயக்கும் 'வானம் வசப்படும்' படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் பூங்கோதை. இவர் தந்தை செல்வாவின் பேத்தியென்று ஒரு செய்தி. "முதல்ல அம்மா அப்பா 'நோ' சொல்லி விட்டார்கள். நான்கு வாரம் அழுது புரண்டு அறப்போராட்டம் செய்த பிறகு சம்மதம் கிடைத்தது. ஆன இதுதான் என் முதல் படமும் கடைசிப் படமும்" என்கிறார் பூங்கோதை.

பொறுத்திருந்து பார்ப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHANDRA'S

## TAKE - OUT RESTAURANT & CATERING INC.



மிகக் குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்று என்றும் சுவையான தரமான உணவுகளை தயாரித்து வழங்குகிறார்கள்

உங்கள் அன்றாட உணவுவகைகள் யாவற்றையும் நீங்கள் விரும்பியபடி உடனுக்குடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

தோசை, மசாலா தோசை, இட்லி, புரியாணி, **Fried Rice Noodles**, கொத்துரொட்டி, கட்லட், றோல்ஸ், பற்றீஸ், சமோசா அனைத்தையும் ஓடர்களுக்கு மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

Cutlery Food Warmers

**மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்**

திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் அனைத்து வைபவங்களுக்கும் உங்கள் தேவைக்கேற்ப கேற்றறிங் சிறந்த முறையில் செய்து தரப்படும்

**Wedding cakes & Birthday cakes**



**Delivery வசதிகள் உண்டு**

உங்கள் வைபவங்களுக்கு கதிரைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

Food for any occasions call: **CHANDRA**

**Tel: (416) 264 - 3345**

**201 MARKHAM ROAD, SCARBOROUGH**
**(Markham & Eglinton)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொறையும் அவர் சம்சாரமும் எங்கிட்ட தந்தாங்க. சாமி நா அப்படியே அவங்க காலில விழுந்திட்டேங்க." அவன் கண்கள் கலங்கின. தொடர்ந்தான் 'தொற என்னத் தூக்கி விட்டாரு. அவரு சம்சாரம் சொல்லிச்சுங்க 'ராமையா நாங்க கண்டி வெயிற் கவுசுக்குப் போய் தங்கிற்று நாளைக்கு காலமை வாறம், இப்ப நேரம் நல்லா பிந்திப் போச்சு நீ போய்ப் படுத்துக்கோ' எண்ணுட்டு போயிட்டாங்க.

காலையில நாங்க நேரத்தோடயே கோயிலுக்குப் போயிட்டமுங்க. நம்ம ஆளுங்க எல்லாம் வந்திருச்சுங்க. தொற மட்டும் வரலீங்க. எல்லாத்துக்கும் ரொம்ப கடுப்பாச்சுங்க. கறுப்பாயின்ர அப்பன் வாய் விட்டே சொன்னாருங்க, "நேத்துத்தான் அப்படீன்னா இண்ணைக்குமா? இவங்க என்ன மனுஷ சாதிதானா? அப்படின்னாரு. மத்தப் பயலுக எல்லாம் தாலியக் கட்டிக் கேடான்னு கிட்டே இருந்தாங்க. நா மட்டும் தொற இம்புட்டுத் தூரம் எனக்காக வந்திருக்காங்க. அவுங்க இல்லாமத் தாலி கட்டினா மறுவாதையா இருக்காது. எப்ப அவரு வாறாரோ அப்பதான் நா தாலி கட்டுவேண்ணு அடிச்சுச் சொல்லிட்டேங்க. சரியா பத்துமணி வாக்கலதாங்க தொற வந்தாருங்க. எல்லாத்துக் கிட்டேயும் மன்னிப்புக் கேட்டுக்கிட்டாங்க. நேரா எங்கிட்ட வந்து அவங்க ரெண்டு பேருமா தாலியத் தூக்கித்தர நா கறுப்பாயி கழுத் தில மூணு முடிச்சுப் போட்டேங்க. கறுப் பாயி கையில தொறையோட சம்சாரம் வெளிநாட்டு உருளோசு ஒண்ணைக் கட்டிவிட்டாங்க. உடனேயே தொறையும் சம்சாரமும் கொழும்புக்குப் புறப்பட்டுட் டாங்க. அப்போ தொற என்னையக் கூப் பிட்டு 'இராமையா கலியாணம் நல்ல படியா முடிஞ்சிடுச்சு. நீ ஏ ஒரு மாசத் துக்கு இங்க நிக்கனும்? நா உனக்கு லொஜ்ஜிலேயே ஒரு அறை ஒதுக்கித் தாறன். நீங்க ரெண்டு பேரும் அதிலையே தங்கிக்கலாம். கறுப்பாயிக்கும் ஒரு மாறு தலா இருக்கும். நீயும் வேலை பாத்ததா ஆயிரும். எனக்கும் நீயில்லாமல் வேலை யெல்லாம் அப்படி அப்படியே கிடக்குது. நல்லா போயிச்சு சீக்கிரமா வரப்பாரு'ண் ணுட்டுப் போனாரு. நானும் நன்னா யோசிச்சுப் பாத்தேங்க. கொழும்புக்குப் போறதே நல்லதுண்ணுட்டு கறுப்பாயியை யும் கூட்டிகிட்டு அடுத்த வாரமே கொழும்புக்குப் புறப்பட்டேங்க." நிறுத்தி மூச்சு விட்டான்.

"கறுப்பாயியோட வந்தப்புறம் எனக்கு மரியாதையே ஜாஸ்தியாப் போச்சுங்க. சின்னச் சின்ன வேலைங்களுக்கே தொற எங் காம்பிறாவுக்கு வந்துருவாருங்க. நானும் கறுப்பாயியும் சினிமாவுக்குப் புறப்பட்டா தொற சொல்லுவாரு 'இராமையா ராத்திரி யில அவள கூட்டிக்கிட்டு திரியாத செக் பொயின்றெல்லாம் இருக்கு ஏதாவது வம்பு வந்திறும். படத்துக்குப் போறதாயிருந்தா டிரைவரை அனுப்பி விர்றன் என்ர காரிலேயே போயிட்டு வாங்க'ம்பாரு. எங்களுக்கு ரொம்ப குஷியாயிடுங்க. டிரைவர் தம்பியும் எங்ககூட வந்து படம்பாக்கும். அம்புட்டு பெரீய காரில நாம ஜாலியா சுத்திட்டு வருவம். இப்படி ரொம்பச் சந்தோஷமா நாங்க இருந்துகிட்டு இருக்கிறப்போதாங்க ஆத்தாளுக்கு உடம்புக்கேலலைன்னு கடு தாசி வந்திச்சுங்க. நா கடுதாசியை எடுத்து கிட்டு தொற கிட்ட போனேங்க.... வெசயத் தைச் சொல்லி 'நானும் கறுப்பாயியும் ஊருக்குப் போயிற்று வரலாமுன்னு இருக் கோமுங்க கொஞ்சம் பணமும் லீவும் வேணுமுங்க' என்று சொன்னப்போ தொற சொன்னாரு 'ராமையா நீ போயிற்று வாறதில பிரச்சினை இல்லை. ஆனா ஏன் ரெண்டு பேரும் போக வேணும் எண்டு நினைக்கிறீங்க? வீண் செலவுதானே. கறுப்பாயி கூட இப்ப உன்ர வேலையச் செய்யப் பழகிற்றாள். அதால நீ மட்டும் போயிட்டு உடனேயே திரும்பிடு. கறுப்பாயி லொட்ஜ பார்த்துக் கொள்ளட்டும்..... நாங்க இருக்கிறம்தானே ஒண்டுக்கும் யோசிக்காம போயிட்டு வாண்ணு' சொன் னாருங்க. எனக்கும் அது சரியாப் பட்டு துங்க. பணத்தை வாங்கிகிட்டு அன்னைக்கு இரவே ஊருக்குப் புறப்பட்டேங்க. ஊருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் போயி ஆத்தாவைப் பாத்தேங்க. உடம்புக்குத் தேவலைங்க. என்னால கறுப்பாயியை விட்டிட்டு நிக்கவே முடிய லீங்க. மூணு நாளில வருவன்னுட்டு வந்த நா அன்னைக்கே புறப்பட்டேங்க.

லொட்ஜ்ஜுக்கு வந்தப்போ மணி பன்னிரண்டாச்சுங்க. எங் காம்பறா பூட்டிக் கிடந்திச்சுங்க. அடுத்த காம்பறாவை தட்டிக் கேட்டேங்க. தொற வந்து கூட்டிக் கிட்டு போனதா சொன்னாங்க. எனக்கு மனசில பக்கென்னாயிடுச்சு. தொறயோட குள்ளப் புத்தி தெரிஞ்சதால நேரா அவரோட புது வீட்டுக்குப் போனேங்க. முன் பக்க கதவெல்லாம் அடைச்சிருந் திச்சு. மெதுவா ஜன்னலால அவரோட காம்பறாவுக்கு எட்டிப் பாத்தேங்க... எங் கறுப்பாயிய தொற கெடுக்க றை பண்ணிக் கிட்டிருந்தாருங்க. கறுப்பாயி முரண்டு பிடிக்கவே தொற சொன்னாரு 'சீ தோட்டக் காட்டுக் கழுதை இவ்வளவு பணம் செலவு செய்து ராமையாவுக்கு கலியாணம் செய்து வைச்சது ராமையால இருக்கிற அன்பில இல்லை. உன்ர படத்தைப் பார்த்ததுமே எனக்கு உன்னைப் பிடிச்சுப் போட்டுது. எப்படியாவது ராமையாவ கலியாணம் கட்ட வைச்சு உன்னை அனுப விக்க வேணும் எண்டுதான் இவ்வளவும் செய்தனான். இப்ப நீ வேணாம்னா ஒரு கொலையே நடக்கும்" எண்ணு ஆத்திரத் தோட கத்தினார். அதுக்கு கறுப்பாயி 'தொற உங்க காலடியில நாயாக் கிடந்து உழைச்ச மச்சானை இப்படி நன்றி இல்லாம பேசறீங்களே அவர் அறிஞ்சா எவ்வளவு வருத்தப்படுவார்' அவள் முடிக்க வில்லை தொற சொன்னார் 'அடி பைத்தியமே ராமையா எங்கிட்டப் பணம் வாங்கிட்டுப் போகேக்க என்ன சொல்லிட் டுப் போனவன் தெரியுமா? தொற கறுப்பா யிய எப்பிடி வேணும்னாலும் அனுபவிச் சிக்கிங்கேண்ணுட்டுத்தான் போனான்'னார். அதுக்கு மேல என்னால தாங்கிகிகிட்டு நிக்க முடியலீங்க. நாங்க ஏழையுங்கதான் சாமி, ஆனா கூட்டிக் குடுக்கிற சாதி யில்லை. என்னை ஏமாத்தினதைக் கூடத் தாங்கிக்குவன் என்னைக் கூட்டிக் குடுக் கிறவன்னு சொன்னதைத் தாங்க முடிய லீங்க. தொறக்கு நல்ல பாடம் படிப்பிக் கணுமுன்னு வெளிய வந்து இருட்டில நா ஒளிச்சு வைச்சிருந்த கவ்வாத்துக் கத்தி யைத் தேடி எடுத்துக்கிட்டுப் போனேங்க. அப்போ தொற கறுப்பாயி கழுத்தை நெரிச்சுகிட்டு இருந்தாரு. எங் கறுப்பாயி துடிச்சுகிட்டுக் கிடந்திச்சுங்க. அம்புட்டுத் தான் காலால காம்புறாக் கதவுக்கு விட்ட உதையில கதவு படீர்ணி திறந்திடுச்சுங்க. தொற எழுந்திரிச்சு என்னைப் பாக்கிறதுக் குள்ள எம் பலமெல்லாந் திரட்டி பின் பக்கமா ஒரு உதை கொடுத்தேங்க. சுவத் தோடமோதி விழுந்தாரு. வசமா அவர் முடிய பிடிச்சுக் கிட்டு கவ்வாத்து வெட்றாப் போல ஒரே வெட்டு! தலை துண்டாயிருச் சுங்க. கறுப்பாயி 'மச்சான்' எண்ணு கத்தி கிட்டே மயங்கிடுச்சுங்க"

தலையைக் குனிந்தபடி அழுதான். பின் ஒருவாறு தன்னை திடப்படுத்திக் கொண்டு சொன்னான் நா எங்கதையைச் சொன்னது நீங்க எம்மீது இரக்கப்பட்டு விடுதலை வாங்கித் தருவீங்கண்ணு இல்ல சாமி. நா செஞ்ச பாவத்துக்கு எனக்கு தூக்குத் தான் வேணும் சாமி. தொற மத்தப் பொம்பளைங்களை அனுபவிக்க நானும் காரணமா இருந்திருக்கேன். இன்னைக்கு நாம்பட்ட வேதனையைத் தாங்க அவங் களும் பட்டிருப்பாங்க. அதால இனி எந்தப் பொண்ணுங்களுக்கும் இப்பிடி ஒரு நிலமை வரக் கூடாதுண்ணுதான் நா இந்தக் கொலய செஞ்சேங்க. அதால எனக்குத் தூக்குத் தாங்க அத சந்தோஷமா ஏத்துக்குவன். ஆனா எங் கறுப்பாயி பாவமுங்க. ஒரு பாவமும் அறியாதது. அத நல்லபடியா வாழவைங்க... வாழ வைங்க" வாய் விட்டழுதான் ராமைய்யா.

(யாவும் கற்பனை)

'ரோஜா' இந்த மாத இதழில் கலைவாணி இராஜகுமாரனின் தொடர்கதை அங்கம் 1, சிறுவர் பூங்கா, குறுக்கெழுத்து போட்டி இல:1 ஆகியன மீள் பதிப்பாகியுள்ளன.
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்னகை புரிய வாரீர்!

• அஞ்சலா ஞானரட்னம்



புன்னகை, இன்று வரையும் நன்மைகளைதான் அள்ளி வழங்கியிருக்கிறது. இதமாக இதழ் விரித்தால் மனதில் மண்டிக் கிடக்கும் பதற்றம் பறந்துவிடலாம். 'பிரஷர் குக்கரில் உள்ள பாதுகாப்பு வால்வ் போல அது செயற்படுகின்றது. மனதில் இறுக்கம் அல்லது ஏமாற்றம் இருந்தால் புன்னகை அந்த இறுக்கத்தை நீக்கி விடுகிறது. அதில் போலித்தனம் இல்லாத போது சந்தேகம் எனும் மாயமான் ஓடிவிடும். சந்தேகத்தாலும், அவநம்பிக்கையாலும் அடைபட்ட உள்ளக் கதவுகள் உடைந்துபோகும். மனநிம்மதியையும், மனமகிழ்ச்சியையும் மழைபோல பொழியும். "உங்களை நான் புரிந்து கொண்டேன், கவலைப்படாதீர்கள்" என்று தட்டிக் கொடுக்கும். "நாம் நல்ல நண்பர்களாக இருக்கலாம்" என்று சொல்லி மனதை குளிர வைக்கும். சக்திவாய்ந்த அந்த ஆயுதம்தான் என்ன?

அதுவே புன்னகை!

உங்கள் புன்னகை!

*புன்னகை என்பது என்ன?*

வேடிக்கை, சம்மதம் அல்லது சந்தோஷத்தைக் காட்ட, இதழ் இலேசாக விரிய *மென்மையாக சிரித்தல்* என்று பொதுவாக அகராதிகள் விளக்கமளிக்கின்றன. புன்னகை ஒருவரின் உணர்வுகளை மற்றவர்களுக்கு மௌனமாக வெளிப்படுத்துகிறது. புன்னகையால் இகழ்ச்சியை வெளிப்படுத்தலாம்.

புன்னகைக்கு இவ்வளவு சக்தியா?!

யாரோ ஒருவர் உங்களைப் பார்த்து புன்னகைத்தால் நிம்மதியடைந்தது அல்லது சந்தோஷப்பட்டது ஞாபகமிருக்கிறதா?

ஆம், புன்னகைக்கு சக்தி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது புன்னகை புரிபவரையும், அவர் யாரைப்பார்த்து புன்னகை புரிகிறாரோ அவரையும் சந்தோஷப்படுத்துகிறது.

புன்னகை செய்வதால் பதற்றங்கள் பதருகளாக பறந்துவிடும். வாழ்க்கை உண்மையில் ஆனந்தமானது. "ஆம், புன்னகை மலரை மற்றவர்கள் மீது அள்ளி வீசுங்கள். அது சிநேகத் தென்றலாக வந்து தழுவும்." புன்னகைக்கும் நமது உணர்ச்சிகளுக்கும் தொடர்புண்டு. நமக்கு நல்ல மனநிலை கிடைக்க *புன்னகை* உதவும். உடல் ஆரோக்கியத்திற்கும் அது நல்லது. 'வாய்விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்பது பழமொழி. ஒருவரின் உடலுக்கும் உள்ளத்திற்கும் அதிகம் தொடர்பிருப்பதாக மருத்துவ அதிகாரிகள் கூறுகின்றனர். எப்போதும் மனப் பாரத்தோடு எதிலும் நம்பிக்கையில்லாமல் இருந்தால், நம்முடைய உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தி குறையும் என்பதை அநேக மருத்துவ ஆராய்ச்சிகள் ஆமோதிக்கின்றன. ஆனால் முகத்தில் புன்னகை வீசினால் மனசுக்குள் மகிழ்ச்சி கீதமாக இசைக்கும். எப்போதும் கலகல-வென்று சிரித்துக் கொண்டு வலம்வந்தால் நோய் நம் பக்கத்தில் வர அஞ்சும்.

புன்னகை மற்றவர்களை வசீகரிக்கிறது. உங்களுக்கு ஆலோசனை அல்லது புத்தி மதி அளிக்கப்படும் ஒரு சந்தர்ப்பத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள். அவ் ஆலோசனை சொல்பவரின் முகபாவனை எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்? அவர்களுடைய முகம் கடுகடுவென்று இருந்தால் அது அவருடைய கோபத்தையும், எரிச்சலையும், வெறுப்பையும் கூட வெளிப்படுத்தும். மறுபட்சத்தில் ஆலோசனை சொல்பவர் முகத்தில் இதமான புன்னகை தவழ்ந்தால் நீங்கள் சௌகரியமாக உணர்ந்து அவர் சொல்லும் அறிவுரையை தாராளமாக ஏற்றுக் கொள்வீர்கள் அல்லவா? மன இறுக்கமான சூழலில் ஒருவருக்கொருவர் தவறாக புரிந்து கொள்வது சகஜம். ஆனால் அந்த நேரத்தில்கூட புன்னகை



வீசினால் மனஸ் தாபங்கள் மறையலாம்.

மௌனமாக நம்முடைய உணர்வுகளை வெளிக்காட்டுவதே புன்னகை என்பதை மறந்துவிடாதீர்கள். 'இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்' என்பதையும் 'நல்லவைகள்' நல்ல பொக்கிஷத்திலிருந்து வரும் என்பதையும் நாம் அறிவோம். அப்படியென்றால் மனதிலும் இதயத்திலும் போலித்தனம் இல்லாதபோது கள்ளமில்லா புன்னகைக்கு பஞ்சமிருக்காது. நம் இருதயத்திலிருப்பது நம் சொல்லிலும் செயலிலும் மட்டுமல்ல நம் முக பாவனையிலும் பளிச்சென்று தெரிய வந்துவிடும். ஆகவே நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதற்கு நாம் எப்போதும் உழைக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றி நாம் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுகிறோமோ அது பளிச்சென்று நம் முகத்தில் தெரியும் என்று சும்மாவா சொன்னார்கள். ஆகவே குடும்ப அங்கத்தினர்கள், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள், நண்பர்கள் ஆகியவர்களின் நல்ல குணங்களையே நாம் சிந்திப்போமாக. அப்போது அவர்களைப் பார்த்து மனசார புன்னகைப்பது நமக்கு சுலபம். இதனால் நற்குணம், இரக்கம், தயவு ஆகிய நல்ல எண்ணங்கள் நிரம்பி வழியும். இதயத்திலிருந்து மலர்ந்த புன்னகையாக இருக்கும். அந்த மலர்ச்சி கண்களிலும் தெரியும். பார்ப் போரின் முகமும் மலரும்.

ஆனால் வளர்ந்த விதத்தால் அல்லது சூழ்நிலையால் சிலருக்குப் புன்னகைப்பது கடினம். நல்லெண்ணம் படைத்தவர்களாக அவர்கள் இருந்தாலும், புன்னகைப்பது அவர்களுக்குப் பழக்கமில்லாமல் இருக்கலாம். உதாரணமாக, ஜப்பானிய ஆண்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அடக்கமாக, அமைதியாக இருப்பதே வழக்கம். ஆகவே முன்பின் தெரியாதவர்களைப் பார்த்து புன்னகை செய்யும் பழக்கம் அவர்களில் அநேகருக்கு இல்லை. மற்ற தேசங்களைச் சேர்ந்தவர்களும் கூட இப்படி இருக்கலாம். கூச்ச சுபாவத்தால் புன்னகைக்க சிரமப்படுவோரும் உண்டு. ஆகவே ஒருவர் எந்தளவு புன்னகைக்கிறார் என்பதை வைத்து அவரை எடை போடக் கூடாது. ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். அவர்களுடைய குணங்களும் வெவ்வேறு. அவர்கள் மற்றவர்களோடு பேசும் முறைகளும் வெவ்வேறு.

நாம் பார்க்கும் புன்னகை எல்லாமே போலித்தனம் இல்லாத புன்னகை இல்லை என்பது கசப்பான உண்மை. புன்னகை செய் என்று சொன்னதும், பளிச்சென்று புன்னகை வீச நாம் ஒன்றும் திறமையான நடிகர்கள் அல்ல. அதுபோல் புன்னகைக்க நாம் விரும்புவதும் இல்லை. நம்முடைய புன்னகை போலியாக இல்லாமல் இயல்பாக இருக்கவேண்டும். முதலில் ரிலாக்ஸ் செய்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் அது மிகவும் செயற்கையாக இருக்கும்.

புன்னகைப்பது உங்களுக்குக் கஷ்டமாக இருந்தால் ஏன் சற்று முயற்சி எடுக்கக் கூடாது? நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; யாவருக்கும் நன்மை செய்யக் கடவோம். மற்றவர்களைப் பார்த்து புன்னகைப்பதும் 'நன்மை செய்யும்' வழியாகும். 'இது உங்களால் முடிந்ததே! ஆகவே புன்னகையோடு மற்றவர்களுக்கு வாழ்த்துச் சொல்லவும், உற்சாகமாகப் பேசவும் முந்திக் கொள்ளுங்கள். உங்களது புன்னகை அவர்களைக் கட்டிப்போடும். புன்னகை செய்யச் செய்ய அது உங்கள் உதட்ரோடங்களில் நிரந்தரமாகக் குடிகொள்ளும்.

புன்னகை மலர வாழ்த்துவதில் முந்திக் கொள்ளுங்கள்.

புன்னகை
நல்லெண்ணங்களின் பூக்கள்.


அடுத்த இதழில்
தமிழீழ சிறப்புப் பக்கங்கள்.
தொகுப்பு:
இ. ரவீந்திரன்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NKS Draperies & Blinds

- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters





உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
**கேதா**

**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயிபாமாவின்
# குறுக்கெழுத்துப்
## போட்டி இல: 1

**இடமிருந்து வலம்:-**

1. எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் முன் இவரை வணங்கி ஆரம்பித்தால் எல்லாம் வெற்றி தான்.

7. யானையின் ஆண் களிறு. பூனையின் ஆண் இங்கு தடுமாறி வருகிறது.

13. கங்கை அமரன் இசைஞானி இளையராஜாவுக்கு இந்த உறவு. வீட்டில் இளையவனையும் செல்லமாக இப்படியும் அழைக்கலாம். இளையவன் என்பதால் இறுதி எழுத்தையும் இழந்தோ வரவேண்டும்?

19. பதினாறு வயதிலிருந்து முப்பது வயதிற்குட்பட்ட ஆண்மகன் இங்கு குழம்பி வருகிறார். வீரனையும் இப்படி அழைப்பதுண்டு.

23. தமிழ் நாட்டின் எழுத்தாளர் இருவரில் ஒருவர் கோபு. மற்றவர் சதுரங்களுள் அடைக்கப்பட்டு சங்கடப்படுகிறார்.

31. தாயக விடுதலைக்காக தம்மைத் தந்த உத்தமர்கள். இவர்கள் வீரத்தைக் கண்டு எதிரிப்படை அஞ்சுவது போல இறுதி எழுத்தும் அஞ்சி ஒடுங்கி நிற்கிறது.

**மேலிருந்து கீழ்:-**

1. உண்பதற்கு உணவு வேண்டும். உடுப்பதற்கு ஆடை வேண்டும். இருப்பதற்கு வீடு வேண்டும். இவை மட்டும் இருந்தால் போதுமா? இது இல்லாவிட்டால் வாழ்க்கை உப்பற்ற உணவு தான்.

2. முத்தமிழில் ஒன்று குழம்பி வருகிறது.

3. நான்முகனின் ஒரு தலையை வைரவர் எடுத்ததால் முதல் எழுத்தின்றி அடைபட்டிருக்கிறார் படைத்தற் கடவுள்.

4. துயரம், துன்பம், துக்கம், எல்லாம் இதன் ஒத்த கருத்துகள். விடை தெரியாது போனால் நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை.

12. இந்த உயிரினம் உறங்கும் போது கண்களை மூடுவதே இல்லையாம். ஏன் தெரியுமா? அதற்குத் தான் இமைகளேயில்லையே. இது என்றால் படையும் நடுங்கும் என்பர். அட இது தெரியாதா உங்களுக்கு?

21. சூரியனின் மறுபெயர் குழம்பி வருகிறது.

23. இவர் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்னது மாதிரி. உங்களுக்கு இவரை நிச்சயம் தெரிந்திருக்குமே!

**உங்கள் பதில்கள் யாவும் பெப். 10ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'ரோஜா'வின் முகவரிக்கோ அல்லது தொலைநகலுக்கோ அனுப்பிவையுங்கள். சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலி ஒருவருக்கு $10.00 பரிசு.**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் பயன் நோய் கேள்வி தீர்வு

இவ்விதழில்
உங்கள் கேள்விகளுக்கு
பதில் தருகிறார்
பல்வைத்தியர்
அ. செல்வராஜா

(1) எனது முரசுகள் கரைகின்றன. இதைத் தடுக்க வழி இருக்கின்றதா?

பல் முரசுகள் ஏன் கரைகின்றன என்பதைப் புரிந்து கொண்டால் அதைத் தடுக்க உள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிப்பது இலகுவாகும். நாங்கள் உணவு அருந்திய பின்னர் பல்லும், முரசும் சந்திக்கும் இடத்திலும், பல் இடைவெளிகளிலும் உணவுத் துணுக்குகள் சேருகின்றன. இவை அகற்றப்படாவிடில் வாயில் குடியிருக்கும் பற்றீரியாக்களினால் அமிலமாக மாற்றப்படுகின்றன. இந்த அமிலம் பற்களை மட்டுமல்ல முரசுகளையும் தாக்குவதனால் முரசு அழிவடைகின்றது. இதைத் தான் பலர் முரசு கரைகிறது என்கிறார்கள். மேற்குறிப்பிடப்பட்டதிலிருந்து "முரசு கரைவதற்கு" உணவும் பற்றீரியாவும் தேவை என்பது புலப்படுகின்றது. உணவருந்திய பின்னர் பற்தூரிகை கொண்டு பற்களைச் சுத்தம் செய்வதன் மூலம் பல் இடைவெளிகளில் சேரும் உணவுத் துணிக்கைகளைக் குறைக்க முடியும். ஒவ்வொரு முறை உணவு அருந்தியவுடனும் பற்துலக்க வசதி இருக்காவிடில் ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது பல்துலக்குவது அவசியம். அதுவும் சாப்பாட்டிற்குப் பின்னர், வாயில் இருக்கும் பற்றீரியாக்களை முற்றாக அழிக்க முடியாது. ஆனால் கிருமிகளை அழிக்கக் கூடிய (Antibacterial mouth wash) வாய் கொப்பளிக்கும் மருந்தை தினமும் பாவிப்பதன் மூலம் அவற்றை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

மருத்துவப் பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு வேறுபல காரணங்கலாலும் முரசு பாதிப்படையலாம். இவைபற்றி உங்கள் பல்வைத்தியரிடம் ஆலோசனை பெறுவது முக்கியம்.

(2) அடிக்கடி வாய் கொப்பளித்தாலும் என் வாய் மணப்பது ஏன்?

வாய் மணம் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது வயிற்றில் இருந்து வருவது. மற்றது வாயில் இருந்து வருவது. பல் இடைவெளிகளில் அடையும் உணவு வாய் கொப்பளிப்பதனால் போகாது. பற்தூரிகை கொண்டு அகற்ற வேண்டும். இப்படி அகற்றப்படாவிடில் வாயில் இருக்கும் நுண் கிருமிகளால் அந்த உணவுத் துண்டுகள் சீரணிக்கப்படும் போது வெளியாகும் சில பொருட்களால் (Volatile sulphur compounds) வாய் நாற்றம் ஏற்படலாம்.

தினமும் நாக்கு வழிப்பதன் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக்கின் மேற்பகுதியில் இருந்து இந்த துர்நாற்றத்தை ஏற்படுத்தும் பற்றீரியாக்களை அகற்ற முடியும். முதற் கேள்வியில் கூறியதுபோல் வாய் கொப்பளிப்பதற்கு என்றுள்ள மருந்துகளை தினம் பாவிப்பதன் மூலமும் இந்த நுண்கிருமிகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

வாய் காய்ந்துபோய் அத்துடன் வாய் மணமும் இருந்தால், இவர்கள் 'அல்கஹால்' இல்லாத (Alcohol free mouth wash) மருந்தால் வாய் கொப்பளிப்பது நன்று. பற்களில் சூத்தை இருந்து அதில் உணவு அடைந்தால் சில நேரங்களில் பற்தூரிகையால் அகற்ற முடியாமல் இருக்கலாம். இதனா லும் வாய் நாற்றம் தெரியலாம். அந்த பற்சூத்தைகளை நிரப்புவதுதான் இதற்கு வழி.

வயிற்றில் இருந்து வரும் மணத்திற்கு மருத்துவப் பிரச்சனைகள் காரணமாய் இருக்கலாம்.

(3) பல்வைத்தியரிடம் போகாமல் எனது வாய் மணக்கிறதா என்று அறிய ஏதாவது வழிமுறை உண்டா?

உண்டு. உங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரிடம் உங்கள் வாய் மணக்கிறதா என்பதைக் கேட்டுத் தெரியலாம். ஏன் உங்கள் நண்பர்கூட இதைச் செய்யலாம். "ஹா" என்று அவர் முகத்தில் நீங்கள் ஊதுவதை அவர் மணந்து கூறவேண்டும். இது எல்லோருக்கும் உடன்பாடான ஒரு வழிமுறையாய் இருக்காது என்பது உண்மை.

நீங்களாகவே இதைப் பரிசோதிக்கவும் ஒரு வழி உண்டு. உங்கள் புறங்கையில் நாக்கால் நக்கிவிட்டு பத்து விநாடிகளில் அந்த இடத்தை மணந்து பாருங்கள். உங்கள் மூக்கின் பதில் என்ன? விடை கிடைக்கும்.

**உங்கள் கேள்விகளை 'ரோஜா'வின் முகவரிக்கோ தொலைநகலுக்கோ அனுப்பிவையுங்கள்.**


# முன்பு கருதப்பட்டு வந்ததை விட பூமியின் நிறை குறைவானது



புவியீர்ப்பு விசையை துல்லியமாகக் கணக்கிடக்கூடிய நவீன கருவியின் உதவியுடன் பூமியின் திணிவை மீள்கணக்கீடு செய்துள்ள பௌதிகவியலாளர்கள் அதன் திணிவு 5.972 செக்ஸ்ரிலியன் (5.972,000,000,000,000,000,000) மெற்றிக் தொன்கள் என முடிவு செய்துள்ளனர். முன்னைய கணக்கீடுகளின்படி பூமியின் நிறை 5.978 செக்ஸ்ரியன் மெற்றிக் தொன் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த புதிய தகவலை அமெரிக்காவின் சியாற்றெல் மாநிலத்தில் உள்ள வாஷிங்டன் பல்கலைக்கழக பௌதிகவியல் விஞ்ஞானி ஜென்ஸ் கண்ட்லெக் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் அச்சுக் கலையில், அழைப்பிதழ்களில் முன்னணி வகிப்பவர்கள்!

PARADISE PRINT

Since 1991

commercial and instant printing
digital black & white copy
digital colour colour copies
classic indian and canadian invitations
four color graphic design
four color printing
poster design and printing
lamination - signs
desktop publishing
hotfoil stamping
rubber stamp
cd audiotape dvd
replication and cover printing
and much more,................



Tel: 416 288 6449
Fax:416 288 0595
www.paradiseprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org